# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

## வருடாந்த அறிக்கையும்,
## கணக்குக் கூற்றும்

2011 ஜனவரி 1ம் திகதி முதல் 2011 டிசம்பர் 31ம் திகதி வரை

**கௌரவ வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சர்,**
**வெகுசன ஊடக மற்றும் தகவல்துறை அமைச்சு,**
**கொழும்பு - 05**

கௌரவ அமைச்சர்,

**வருடாந்த அறிக்கை – 2011**

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 14 (1) இற்கமைய, கூட்டுத்தாபனத்தின் சார்பில் நான் கீழ் குறிப்பிடப்படும் விடயங்களை அனுப்பி வைக்கின்றேன்.

1. 01-01-2011 முதல் 31-12-2011 வரையான ஆண்டுக்குரிய கூட்டுத்தாபனத்தின் நிர்வாக அறிக்கை
2. 01-01-2011 முதல் 31-12-2011 வரையான ஆண்டுக்குரிய கூட்டுத்தாபனத்தின் கணக்குக் கூற்று
3. 31-12-2011 அன்று பூர்த்தியான ஆண்டுக்குரிய கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் மீதான கணக்காளர் நாயகத்தின் அறிக்கை
4. கணக்காளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் கருத்துக்கள்

உங்களுக்கு விசுவாசமான

**ஹட்சன் சமரசிங்க**
தலைவர்
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
கொழும்பு - 07

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

## தொலைநோக்கு

இலங்கை ஊடகத் துறையில் முன்னோடி பொதுச் சேவை ஒலிபரப்புக்குரிய பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

## பணிநோக்கு

பொருளாதார, சமூக, கலாசார, இன, கல்வி மற்றும் களிப்பூட்டல் போன்ற பல்வேறு துறைகள் தொடர்பில் நேயர்களிடமிருக்கும் திறன்கள், அறிவு மற்றும் மனோநிலைகளை விருத்தி செய்வதன் மூலம் நேயர்களின் வாழ்க்கைத் தரத்தை விருத்தி செய்யும் விதத்தில் வானொலி ஒலிபரப்புத் துறையை நிறைவேற்றுதல்

## நோக்கங்கள்

1. சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில வானொலி அலைவரிசைகளுக்கான உயர் செவிமடுத்தல் ஆற்றலை பேணும் ஒலிபரப்பாளராக தொடர்ந்தும் தொழிற்படுதல்
2. நம்பகரமான, நடுநிலையான தகவல்களை உடனுக்குடன் கவர்ச்சிமிக்க பாணியில் வழங்கும் முன்னணி ஒலிபரப்பாளராக தொடர்ந்தும் தொழிற்படுதல்
3. உள்நாட்டு கலாசாரத்தின் மேம்பாட்டுக்காக உயர் தரத்திலான, ஆக்கபூர்வமான நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்குதல்
4. விரிவான அறிவையும், திறன்களையும், மனோநிலைகளையும் கொண்ட சுய ஊக்கமுள்ள ஒரு தொழிற்படையை விருத்தி செய்வதற்குத் தேவையான பயிற்சியை வழங்குதல்
5. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நேயர்களுக்கு தெளிவான மற்றும் ஸ்திரமிக்க ஒலிபரப்பு வெளியீடுகளை வழங்குவதற்கு ஏற்றவிதத்தில் எமது தயாரிப்பு மற்றும் ஒலிக்கடத்தல் தொழில்நுட்பத்தை புதுப்பித்தல்
6. ஒழுக்க நெறிமுறைகளுக்கு பொருந்தும் விதத்தில் ஒரு அர்த்தமுள்ள ஒலிபரப்பு ஊடக கலாசாரத்தை ஊக்குவிக்கும் முன்னோடி நிறுவனமாக தொழிற்படுதல்
7. அரச கொள்கைகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்களின் அமுலாக்கம் பற்றி பொது மக்களுக்கு அறிவிக்கும் தேசிய வானொலி வலையமைப்பாக செயற்படுதல்
8. உயர்ந்தபட்ச அளவில் நிதி நிர்வாகம் மற்றும் மனிதவள முகாமைத்துவத்தை பேணுதல்
9. உபாயரீதியாக போட்டிச் சந்தையை வெற்றி கொள்ளுதல்

# நிர்வாக அறிக்கை – 2011

**அறிமுகம்**

இந்த வருடாந்த அறிக்கையானது 2011 ஆம் ஆண்டு ஜனவரி 01ம் திகதி முதல் 2011, டிசம்பர் 31ம் திகதி வரையான 12 மாத காலத்திற்காக முன்வைக்கப்படுகின்றது. இந்தக் காலப் பகுதிக்குள் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் சபை கீழ்வருமாறு அமைந்திருந்தது.

1. திரு. ஹுட்சன் சமரசிங்க — தலைவர்
2. கலாநிதி. ஹரிஸ்சந்திர விஜேதுங்க — உறுப்பினர்
3. திரு. குமாரதாச சப்புத்தந்திரி — உறுப்பினர்
4. திரு. மனோஜ் பீரிஸ் — உறுப்பினர்
5. திருமதி தர்ஷன சேனநாயக்க — திறைசேரி பிரதிநிதி

**நிர்வாக அறிக்கை**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (இ.ஒ.கூ) இலங்கையின் முன்னோடி வானொலி ஒலிபரப்பு வலையமைப்பாக தனது சேவையை வழங்கும் நோக்குடன் 07 தேசிய அலைவரிசைகள், 06 பிராந்திய அலைவரிசைகள் மற்றும் 02 சமூக வானொலி அலைவரிசைகள் ஊடாக 2011 ஆம் ஆண்டில் ஒலிபரப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

பொருளாதாரம், சமூக கலாசாரம், ஒழுக்கம், கல்வி மற்றும் களிப்பூட்டும் நடவடிக்கைகள் போன்ற நேயர்களின் அன்றாட வாழ்க்கையில் நேரடியாகத் தாக்கம் செலுத்தக் கூடிய வித்தியாசமான துறைகளில் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிநோக்காகும்.

2011 ஆம் ஆண்டில் பொது மக்களின் அறிவு, மனோநிலைகள் மற்றும் திறன்களை விருத்தி செய்வதன் மூலம் ஒரு தேசிய பணிநோக்கை நிறைவேற்றும் நோக்கத்திற்கு முக்கியத்துவமளிக்கப்பட்டது.

வெளிநாடுகளை இலக்காகக் கொண்டு 04 வித்தியாசமான மொழிகளில் 4 வானொலி அலைவரிசைகளை நிர்வகித்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் சர்வதேச நேயர்களின் உள்ளங்களை வெல்ல முடிந்துள்ளது.

சிங்கள தேசிய சேவை, தமிழ் தேசிய சேவை, சிங்கள வர்த்தக சேவை, சிற்றி எவ்.எம், தென்றல், ஆங்கில சேவை, ஹிந்தி சேவை, மத்திய கிழக்குச் சேவை, விதுல, டைம் ரேடியோ, இசைப் பிரிவு, விளையாட்டுப் பிரிவு, சமய நிகழ்ச்சிப் பிரிவு, செய்தி மற்றும் நடப்பு விவகாரப் பிரிவு, ஜனாதிபதிப் பிரிவு, போன்ற நிகழ்ச்சிப் பிரிவுகள் கலாசாரம், அரசியல் மற்றும் சமய கட்டமைப்பில் எமது தேசிய அடையாளத்தைப் பேணி மேற்குறிப்பிட்ட பணிநோக்கை நிறைவேற்றுவதற்காக வித்தியாசமான நிகழ்ச்சிகளை வடிவமைத்துள்ளன. நிர்வாகம், மத்திய செயற்பாடு, நிதி, போக்குவரத்து, கணக்கு, வரவேற்பு, சந்தைப்படுத்தல் மற்றும் பயிற்சி போன்ற போன்ற பிரிவுகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சித் திட்ட துணை சேவைகளாக தொழிற்படுகின்றன.

மீனாய்வுக்குட்படுத்தப்படும் ஆண்டில், தேசிய பணிநோக்கை நிறைவேற்றுவதற்காக சிங்கள தேசிய சேவையானது தம்ம போதனைகளையும், மேலும் பல நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்பியுள்ளன.

சிங்கள தேசிய சேவையில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளில் இசிவர அசப்புவ, திவியட்ட சவியக், சந்தியா சேவய, சித்த நிவன புது பன, சுபாரதி, கொவித்தெனட்ட பெயக் மற்றும் போன்ற நிகழ்ச்சிகளும், இணையதள வளங்களின் பயன்பாடும் குறிப்பிடத்தக்கவை.

சிங்கள வர்த்தக சேவையானது (வெலந்த சேவய) தரு அத்தரட்ட தருவக், உரும ரக்கிமு திய சுரக்கிமு, பெஹபர லமா லொவக், லக்ஷபதியோ, வனந்தரே கதந்தரே, அனுதகரயா, நேத்ராபூஜா, மெத் கருணா, முவன் பலஸ்ஸ, ருவன் லந்தக், சுவபர திவியக் போன்ற அனுசரனை நிகழ்ச்சிகள் ஊடாக வானலை நேரத்தை விற்றுள்ளது.

பல்வேறு துறைகளைச் சேர்ந்த தொழில்வாண்மையாளர்களின் இசைத் திறமைகளை வெளிக்கொண்டு வரும் “தரு அத்தரட்ட தருவக்” என்ற இசை நிகழ்ச்சி சிற்றி எவ்.எம் அலைவரிசையுடன் இணைந்து சிங்கள வர்த்த சேவையினால் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சி 2011 ஆம் ஆண்டில் மிகப் பிரபல்யமிக்க ஊக்குவிப்பு நிகழ்ச்சியாக அமைந்திருந்தது. தமது துறைகளில் உயர் மட்டத்தில் இருக்கும் தொழில்வாண்மையாளர்களுக்கு இந்த நிகழ்ச்சி ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியதோடு, புத்திஜீவிகளாக இருக்கும் நேயர்களுடன் தொடர்புகளை பேணுவதற்கும் வழிவகுத்தது.

தமிழ்த் தேசிய சேவையின் விடியும் வேளை, கவிதைக் கலசம், முத்தமிழாரம், பெண்ணுலகம், சிறுவர் மலர் மற்றும் ஏனைய நாடக நிகழ்ச்சிகள் மிகவும் பிரபல்யம் அடைந்தன. மேலும் தமிழ் தேசிய சேவையானது தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியமான தினங்களை குறிக்கும் வித்தியாசமான நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்பியது.

இலங்கையின் வர்த்தக ஒலிபரப்புத் துறையில் ஒரு முன்னோடிச் சேவையை வழங்கும் நோக்குடன் சிங்கள வர்த்தக சேவையானது மீளாய்வுக்குட்படுத்தப்படும் ஆண்டில் வர்த்தக நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவமளித்ததோடு, வர்த்தக விளம்பரங்களுக்கு கூடுலான நேரத்தை ஒதுக்கியது. அதேபோல் வாடிக்கையாளர்களுக்கு புதிய நிகழ்ச்சி வடிவமைப்புக்களை அறிமுகப்படுத்தியது. பிரபல ஊடகக் கலைஞர்களை கௌரவிக்கும் வகையில் நெறிப்படுத்தப்பட்ட தொடரான நிகழ்ச்சிகளில் பிரபல வானொலி நகைச்சுவையாளர் பேட்டி குணதிலக்கவை பாராட்டுவதற்காக நடைபெற்ற விழா 2011 ஆம் ஆண்டில் மிகவும் பெறுமதிமிக்க வைபவமாகும்.

விதுல சிறுவர் அலைவரிசையும், கல்விச் சேவையும் தேசிய சேவையுடன் இணைந்து பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை சிறுவர்களுக்காக பல்வேறு நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றன.

தென்றல் சேவையில் காலை 7.00 மணி முதல் காலை 9.00 மணி வரை செய்திப் பெறுமானத்தைக் கொண்ட நடப்புத் தகவல்கள் ஒலிபரப்பப்படுகின்றன. மேலும் இந்த சேவை 2011 ஆம் ஆண்டில் சர்வதேச செய்திகளையும், விசேட நிகழ்ச்சிகளையும் உள்ளடக்கிய விசேட நிகழ்ச்சிகளையும் தயாரித்து ஒலிபரப்பியுள்ளது. சர்வதேச பெண்கள் தினம், உலக சுகாதார

தினம், சமாதான தினம், வயோதிபர் தினம், உலக சிறுவர் தினம், ஆசிரியர் தினம், உலக எயிட்ஸ் தினம் என்பன பற்றிய தகவல்கள் அவற்றுள் அடங்குகின்றன. ரம்சான், தைப்பொங்கல், தேசிய தினம், சிவராத்திரி பூஜை, ஹஜ், தீபாவளி, நத்தார் போன்ற விசேட நிகழ்ச்சிகளும் தென்றல் சேவையில் ஒலிபரப்பப்பட்டது.

ஆங்கில சேவையும் விசேட தினங்களையும், அதேபோல புகழ்மிக்க நபர்களையும் அடிப்படையாகக் கொண்ட நாளாந்த மற்றும் வாராந்த நிகழ்ச்சிகளை தயாரித்திருந்தன. 2011 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை தெளிவுபடுத்தும் விசேட நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பப்பட்டுள்ளன. பல இசை நிகழ்ச்சிகளும் நாளாந்தம் ஒலிபரப்பப்பட்டுள்ளன. நத்தார் நிகழ்ச்சிகள், இசைக் குழுக்களை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சிகள், இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையின் செயலாற்றுகையை எடுத்தியம்பும் இசை நிகழ்ச்சிகள் மற்றும் சார்ட் ஷோவ் நிகழ்ச்சிகளும் 2011 ஆம் ஆண்டில் ஒலிபரப்பப்பட்டுள்ளன.

“ தெளிவு” , “ எமது பாடசாலை”, “ சிறுகதை”, “ நபிமொழிகள்”, “ பூர்வீகம்”, “ நூருல் இஸ்லாம்”, “மஞ்சரி” போன்றன முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் அனுசரணை நிகழ்ச்சிகளில் சிலவாகும்.

கூட்டுத்தாபனத்தின் விளையாட்டுப் பிரிவினால் பாடசாலைகளுக்கிடையிலான பிரீமியர் லீக் போட்டித் தொடர்கள், மேற்கிந்திய தீவுகள் மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான ஒருநாள் கிரிக்கட் போட்டி, பாடசாலைகளுக்கு இடையிலான வருடாந்த கிரிக்கட் போட்டித் தொடர்கள், ஐ.பீ.எல் கிரிக்கட் தொடர்கள், இலங்கை இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான போட்டி, 2014 ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டி, கல்டெக்ஸ் பேபி கெயார், மகாவலி விளையாட்டு விழா, இலங்கை அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான கிரிக்கட் போட்டி, கஜபா சுப்பர் க்ரொஸ், இலங்கை பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான கிரிக்கட் போட்டி, இலங்கை தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான கிரிக்கட் போட்டிகள், சார்ஜா கிரிக்கட் போட்டித் தொடர் போன்ற பல விளையாட்டு நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப முடிந்ததுள்ளது.

மீன் பிடியாளர்களுக்கான சயுர என்ற அனுசரணை வானொலி நிகழ்ச்சி அதிகாலை 12.00 மணி முதல் அதிகாலை 4.00 மணி வரை சிற்ற எவ்.எம் அலை வரிசை ஊடாக நேரலையாக ஒலிபரப்புகின்றது. நோன்மதி தினங்கள் அதேபோல தேசிய மற்றும் சர்வதேச முக்கிய தினங்கள் பற்றிய பல விசேட நிகழ்ச்சிகளும் இந்த அலைவரிசையில் ஒலிபரப்பப்படுகின்றது. மெல்லிசைப் பாடகர்களின் புதிய திறமைகளை ஊக்குவிக்கும் நோக்குடன் சிங்கள தேசிய சேவை “ சுபஹாவித்த கீத்தய” என்ற நேயர்களின் விருப்பத்தை வென்ற ஒரு நிகழ்ச்சியை ஒலிபரப்பியுள்ளது.

செய்தி மற்றும் நடப்பு விவகாரப் பிரிவு நாளாந்தம் மூன்று மொழிகளிலும் 40 செய்தி அறிக்கைகளை ஒலிபரப்புகின்றது. “ புவத் செனக்கலிய”, புவத் அட்டுவாவ ஆகிய நிகழ்ச்சிகள் 2011 ஆம் ஆண்டில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகளாகும். மேலும் 2011 ஆம் ஆண்டில் மொபிட்டெல்லுடன் இணைந்து “ எஸ்.எல்.பீ.சி நியுஸ்” என்ற தொலைபேசிக்

குறுந்தகவல் செய்திச் சேவையொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. செய்தி மற்றும் நடப்பு விவகாரப் பிரிவின் நோக்கம் அரசாங்கத்தின் கொள்கைக்கு ஏற்ற விதத்தில் சரியான உண்மையான தகவல்களை வழங்குவதாகும்.

கூட்டுத்தாபனத்தின் ஜனாதிபதிப் பிரிவின் விசேட கடமை யாதெனில் அதி மேதகு ஜனாதிபதி அவர்கள் பங்கேற்கும் விசேட நிகழ்ச்சிகளையும், ஏனைய விசேட நிகழ்ச்சிகளையும் தொகுத்து வழங்குவதாகும். அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் பங்கேற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 66 ஆவது கூட்டத்தொடர் பற்றிய விபரங்கள், நுரைச்சோலை அனல் மின் நிலையத் திறப்புவிழா, தெற்கு அதிவேகப் பாதைத் திறப்பு, தாமரைத் தடாக மகிந்த ராஜபக்ஷ அரங்கின் திறப்பு விழா போன்றவை பற்றிய ஊடக தகவல்களை உள்வாங்கியமை என்பன இவற்றுள் சிலவாகும்.

சந்தைப்படுத்தல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட வர்த்தகத்தின் மூலம் 31,619,866.00 ரூபா வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது. இது அதற்கு முந்திய வருடத்தையும் விட 5,117,578.00 ரூபா வளர்ச்சியைக் காட்டுகின்றது.

நேயர் ஆய்வுப் பிரிவானது 2011 ஆம் ஆண்டுக்கான வரவேற்பளிப்புத் தொடர்பில் ஒரு மதிப்பீடொன்றை மேற்கொணடது. இதற்கமைய, அனைத்து சேவைகளினதும் வரவேற்பளிப்பு நிலை பலவீனமாக இருப்பதாகவும் இது துரிதமாக விருத்தி செய்யப்பட வேண்டும் என்றும் தெரிய வந்தது. அனைத்து சிங்கள வானொலி அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள் பற்றிய மதிப்பீடானது மீளாய்வுக்குட்படுத்தப்படும் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனத்தின் பயிற்சி நிறுவகமானது கூட்டுத்தாபனத்தின் மனித வளங்களை விருத்தி செய்வதற்கான 17 நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தியுள்ளது. அவற்றில் 15 நிகழ்ச்சிகள் நீண்ட காலத்தை அடிப்படையாகக் கொண்டவைகளாகும். இந்தப் பயிற்சிப் பிரிவினால் வருமானம் ஈட்டும் நோக்குடன் வெளிவாரி மாணவர்களுக்காக 7 பாடநெறிகள் நடத்தப்பட்டுள்ளன இதன் மூலம் ஈட்டப்பட்ட மொத்த வருமானம் 225,850.00 ரூபாவாகும்.

முந்திய வருடத்தில், பொறியியல் பிரிவு ஒலிகடத்தல் முறை மற்றும் ஏனைய தொழில்நுட்ப விடயங்களை நிர்வகிப்பதற்காக பல்வேறு செயற்திட்டங்களை அமுல்படுத்தியது. அவற்றில் தலைமை அலுவலகத்திற்கு 5 டொன் குளிரூட்டல் கட்டமைப்பை பொருத்தியமை, ஆங்கில வர்த்த சேவைக்காக தன்னியக்க கணிணி முறையை அறிமுகப்படுத்தியமை, ஒரு கட்டண முறையொன்றின் ஊடாக கூட்டுத்தாபனத்திற்கு தேவைப்படும் பாடல்களை பதிவிறக்கம் செய்து கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்தியமை, அனிவத்த தொழிலாளர்கள் தங்குமிடத்தையும், அம்பேவல சேர்கிட் பங்களாவையும் புதுப்பிப்பதற்கான நடவடிக்கைகள், கலையக கருவிகளை புதுப்பித்தல், கூட்டுத்தாபனத்தின் கணிணிப் பிரிவுக்குரிய உட்கட்டமைப்பை பூர்த்தி செய்தமை, ஆனந்த சமரகோன் கலையகத்திற்கு 48 அலைவரிசைகளின் வெளியீட்டை பிரதிபலிக்கும் ஒரு புதிய கொன்சோலை பொருத்தியமை, 10 ஆம் இலக்க கலையத்திற்கு இசை நிகழ்ச்சிகளை பதிவு செய்வதற்காக புதிய தொழில்நுட்ப கருவியை பொருத்தியமை என்பன இவற்றில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய சில உதாரணங்களாகும்.

# கணக்குக் கூற்று – 2011

# ஐந்தொகை

## 2011 டிசம்பர் 31ம் திகதியன்று இருந்தவாறு

| சொத்துக்கள் | குறிப்புக்கள் | | 31.12.2011 ரூபா. | | 31.12.2010 ரூபா |
|---|---|---|---|---|---|
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | | | |
| சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணம் | **8** | | **823,519,652** | | **837,078,001** |
| பயனில் உள்ள முதலீடு | | 9,148,693 | | | |
| லங்காபுவத் நிறுவனம் மீதான முதலீடு | **9** | 1,000,000 | **10,148,693** | 1,000,000 | **1,000,000** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| சரக்கு இருப்புக்கள் (நுகரக்கூடிய) | **10** | | 29,111,669 | | 26,757,117 |
| கடனாளிகள் - வானலை நேர விற்பனை | | 168,681,587 | | 196,203,459 | |
| (அ.மு கடன்களுக்கான ஏற்பாடு.) | | (70,091,476) | 98,590,111 | (58,186,429) | 138,017,030 |
| பணியாளர்களுக்கான கடன்கள், முற்கொடுப்பனவுகள், பயணச் சரக்கு | **11** | | 33,105,549 | | 41,128,538 |
| பல்வகைக் கடனாளிகள் | **12** | | 37,031,571 | | 45,091,131 |
| ஏனைய வைப்புக்கள் | | | 9,847,582 | | 9,422,582 |
| ரொக்கப் பணம், நிலுவைகள் மற்றும் கோரிக்கை மீதான வைப்புக்கள் | **13** | | 145,935,186 | | 94,344,635 |
| | | | **353,621,668** | | **354,761,033** |
| **மொத்த சொத்துக்கள்** | | | **1,187,290,012** | | **1,192,839,033** |
| **பங்கும் பொறுப்புக்களும்** | | | | | |
| **மூலதனமும் நிதிக் கையிருப்பும்** | | | | | |
| மூலதனம் | | 307,386,085 | | 307,386,085 | |
| மூலதனக் கையிருப்பு | | 3,900,003 | | 3,900,003 | |
| மீள்மதிப்பீட்டு இருப்பு | | 14,421,999 | | 14,421,999 | |
| வருவாய் இருப்பு | | 49,415,938 | 375,124,025 | 13,001,061 | 338,709,148 |
| | | | **375,124,025** | | **338,709,148** |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | | | |
| பணிக் கொடைக்கான ஏற்பாடு | **14** | 151,574,555 | | 154,469,646 | |
| ஒத்திவைக்கப்பட்ட வருமானம் (ஜப்பான் நிதியுதவி) | **15** | 102,461,821 | | 09,213,811 | |
| அரசாங்க நிதியுதவி | **16** | 242,646,076 | | 248,767,202 | |
| குத்தகைக் கணக்கு (மோட்டார் வாகனங்கள்) | **17** | 39,835,192 | | 16,671,355 | 529,122,014 |
| | | | **536,517,644** | | **529,122,014** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| கடன் வழங்குனர்கள் - வானலை நேர விற்பனை | **18** | 85,768,444 | | 124,497,945 | |
| பல்வகை வைப்புத் தொகைகள் (திரும்பப் பெறத்தக்க) | | 10,166,348 | | 9,575,202 | |
| குத்தகைக் கணக்கு (மோட்டார் வாகனங்கள்) | **17** | 10,722,324 | | 4,496,426 | |
| வரவேண்டிய தொகைகள், முற்கொடுப்பனவுகள் மற்றும் சில்லரைக் கடன் வழங்குனர்கள் | **19** | 168,991,227 | | 186,438,298 | |
| | | | | | 325,007,871 |
| | | | **275,648,343** | | **325,007,871** |
| **மொத்த மூலதனமும் பொறுப்புக்களும்** | | | **1,187,290,012** | | **1,192,839,033** |

| | | |
|---|---|---|
| **ஒப்பம் / ஹட்சன் சமரசிங்க** | **ஒப்பம்/குமாரதாச சப்புதந்திரி** | **ஒப்பம்/எச்.ஏ.யு. ஜயலத்** |
| **தலைவர்** | **பணிப்பாளர் சபை உறுப்பினர்** | **பி.ப.நாயகம் (நிதி)** |
| **இ.ஒ.கூ** | **இ.ஒ.கூ** | **இ.ஒ.கூ** |

## வருமானக் கூற்று

## 2011 டிசம்பம் 31ம் திகதியுடன் நிறைவுபெற்ற ஆண்டுக்கானது

| | | 31.12.2011 | | 31.12.2010 | |
|---|---|---|---|---|---|
| | குறிப்புக்கள் | ரூபா | | ரூபா | |
| வருமானம் | **1** | | 550,961,883 | | 504,636,711 |
| சேர்க்கவும் | | | | | |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | **2** | | 305,834,543 | | 319,085,118 |
| மொத்த வருமானம் | | | **856,796,426** | | **823,721,829** |
| குறைக்கவும் | | | | | |
| விநியோகச் செலவு | **3** | 68,643,211 | | 56,560,161 | |
| நிர்வாக செலவினங்கள் | **4** | 444,285,521 | | 443,392,433 | |
| செயற்படுத்தல் செலவினங்கள் | **5** | 302,056,195 | | 275,986,153 | |
| | | | 814,984,927 | | 775,938,748 |
| நிதிச் செலவுக்கு முந்திய வருமான (இழப்பு) | | | **41,811,499** | | **47,783,081** |
| குறைக்கவும் | | | | | |
| நிதிச் செலவு | **6** | 5,396,622 | 5,396,622 | 9,762,213 | 9,762,213 |
| வரிக்கு முந்திய இலாபம்/ இழப்பு | | | **36,414,877** | | **38,020,868** |
| வரி | | | | | |
| **வரிக்கு முந்திய இலாபம்/ இழப்பு** | | | **36,414,877** | | **38,020,869** |
| முந்திய வருடத்திலிருந்து முன்கொண்டு வரப்பட்ட நிலுவை | | | 13,001,061 | | (25,019,808) |
| **முன் கொண்டு வரப்பட்ட நிலுவை** | | | **49,415,938** | | **13,001,061** |

# பணப் பாய்ச்சல் அறிக்கை

| 2011 டிசம்பம் 31ம் திகதியுடன் நிறைவுபெற்ற ஆண்டுக்கானது | | 2011 | | 2010 |
|---|---|---|---|---|
| **செயன்முறை நடவடிக்கைகளிலிருந்து பணச் செலவு** | | | | |
| வட்டி மற்றும் வரிச்கு முந்திய நிகர இலாபம் | | **36,414,877** | | **38,020,869** |
| **சீரமைத்தல்** | | | | |
| வருமானத்திற்கான ஏற்பாடு (நிவஹன மற்றும் ஏனையவை) | | | | |
| அரசாங்க கடன்தீர் நிதி ஒதுக்கம் | (90,443,516) | | (93,452,441) | |
| நாணய மாற்று விகிதம் மீதான தாக்கம் | | | (117,752) | |
| தேய்மானம் | 79,385,878 | | 77,949,423 | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 6,071,359 | | 3,566,675 | |
| அ.மு கடன்களுக்கான ஏற்பாடு | 12,055,788 | | 2,446,712 | |
| சொத்துக்களை அகற்றுவது மீதான இலாபம்/ இழப்பு | | | (2,343,665) | |
| குத்தகை வட்டி | 3,436,439 | | 3,335,651 | |
| பொருளாதார சேவைக் கட்டணத்திற்கான ஒதுக்கீடு | 6,513,529 | **17,019,478** | 5,779,257 | **(2,836,140)** |
| **நடப்பு மூலதனத்திற்கு முந்திய இயக்க இலாபம்** | | | | |
| ஏனைய வைப்புக்களில் அதிகரிப்பு/ குறைவு | (425,000) | | (1,715,666) | |
| சரக்கு இருப்புக்களில் அதிகரிப்பு/ குறைவு | (2,354,552) | | 60,353,671 | |
| கடனாளிகளில் அதிகரிப்பு/ குறைவு | 27,371,130 | | (13,907,014) | |
| பணியாளர்களுக்கான கடன், முற்கொடுப்பனவு மற்றும் பயணச் சரக்கு என்பவற்றில் அதிகரிப்பு/ குறைவு | 8,022,990 | | 1,139,175 | |
| பல்வகைக் கடனாளிகளில் அதிகரிப்பு/ குறைவு | 8,059,560 | | (5,826,541) | |
| கடன் வழங்குனர்களில் அதிகரிப்பு/ குறைவு | (38,729,501) | | 7,250,552 | |
| பல்வகை வைப்புத் தொகைகளில் (திரும்பப் பெறத்தக்க) அதிகரிப்பு/ குறைவு | 591,146 | | 4,810,233 | |
| வரவேண்டிய தொகைகள், முற்கொடுப்பனவுகள் மற்றும் சில்லரைக் கடன் வழங்குனர்களில் அதிகரிப்பு/ குறைவு | (23,960,601) | **(21,424,828)** | 10,477,924 | **62,582,334** |
| | | **32,009,527** | | **97,767,063** |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (8,966,450) | | (22,849,690) | |
| செலுத்தப்பட்ட பொருளாதார சேவைக் கட்டணம் | | | (2,405,681) | |
| | | (8,966,450) | | (25,255,371) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து நிகர ரொக்கப் பணம்** | | **23,043,077** | | **72,511,692** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து பணப்பாய்ச்சல்** | | | | |
| அரசாங்க ஒதுக்கீடு | 77,570,400 | | 100,000,000 | |
| சொத்துக்களின் விற்பனை | - | | 2,343,665 | |
| சொத்துக்கள், இயந்திர மற்றும் உபகரண கொள்வனவு | (28,577,529) | | (131,739,965) | |
| குத்தகை வாடகைக் கொடுப்பனவு | (11,296,704) | | (7,072,842) | |
| பயன்பாட்டில் உள்ள மூலதனம் | (9,148,693) | | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் நிகர ரொக்கப் பணம்** | | **28,547,474** | | **(36,469,142)** |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து பணப்பாய்ச்சல்** | | | | |
| ரீ.டபிள்யு.ஆர் கடன் மீள்செலுத்தல் | - | | (3,193,908) | |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து நிகர ரொக்கப் பணம்** | | **-** | | **(3,193,908)** |
| **பணம் மற்றும் பணத்திற்கு சமனான பிரதியீடுகளில் உள்ள நிகர அதிகரிப்பு / குறைவு** | | **51,590,551** | | **32,848,642** |
| **காலகட்ட ஆரம்பத்தில் பணம் மற்றும் பணத்திற்கு சமனான பிரதியீடுகள்** | | **94,344,635** | | **61,495,993** |
| **காலகட்ட நிறைவில் பணம் மற்றும் பணத்திற்கு சமனான பிரதியீடுகள்** (குறிப்பு 13) | | **145,935,186** | | **94,344,635** |

## சம பங்கில் இடம்பெறும் மாற்றங்கள் பற்றிய கூற்றுக்கள்

| 2011, டிசம்பர் 31ம் திகதி நிறைவடையும் ஆண்டுக்கானது | குறிப்பிடப்பட்ட மூலதனம்<br>ரூபா | மூலதன இருப்பு<br>ரூபா | மீள்கணிப்பீட்டு இருப்பு<br>ரூபா | திரள் வருமானம் நட்டம்<br>ரூபா | மொத்தப் பங்குகள்<br>ரூபா |
|---|---|---|---|---|---|
| 2010, ஜனவரி 1ம் திகதி அன்று நிலுவை | 307,386,085 | 3,900,003 | | (25,019,808) | 286,266,280 |
| | | | | | - |
| வருடத்திற்கான/ வருமானம் நட்டம் | | | | 38,020,869 | 38,020,869 |
| 2010, டிசம்பர் 31ம் திகதி அன்று நிலுவை | 307,386,085 | 3,900,003 | 14,421,999 | 13,001,061 | 338,709,148 |
| வருடத்திற்கான/ வருமானம் நட்டம் | | | | 36,414,877 | 36,414,877 |
| | | | | | - |
| **2010, டிசம்பர் 31ம் திகதி அன்று நிலுவை** | **307,386,085** | **3,900,003** | **14,421,999** | **49,415,938** | **375,124,025** |

**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**

**2011 டிசம்பர் 31ம் திகதியுடன் நிறைவு பெறும் ஆண்டு**

### 1.1 பொதுவானது

1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டு நிறுவப்பட்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை கொழும்பு 07, சுதந்திர சதுக்கத்தில் கொண்டுள்ள அதேவேளை, அதன் வர்த்தக பிரதான தளமும் கொழும்பு 07, சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ளது.

### 1.2 பிரதான செயற்பாடுகளும் செயன்முறையின் இயல்பும்

குறிப்பிட்ட வருடத்தில் கூட்டுத்தாபனத்தின் பிரதான நடவடிக்கை வானலை நேரத்தை விற்பனை செய்வதாகும்.

### 1.3 வெளியிடுவதற்காக அங்கீகாரமளிக்கப்பட்ட தினம்

2011 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களை வெளியிடுவதற்காக 2012 ஏப்ரல் 05 ஆம் திகதி அங்கீகாரமளிக்கப்பட்டது.

### 1.4 ஊழியர்களின் எண்ணிக்கை

வருடத்தின் நிறைவில் காணப்பட்ட நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை 821. ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை 33.

(31.12.2010 – 861)

## 2.0 குறிப்பிடத்தக்க கணக்கு பற்றிய சுருக்கம்

### 2.1 பொதுவான கொள்கைகள்

**தயார்படுத்தல் அடிப்படை**

2011 டிசம்பர் 31ம் திகதியன்றும் அதன் போது நிறைவுபெற்ற வருடத்திற்குமான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின், ஐந்தொகை, வருமானக் கூற்று, பங்கு மாற்றக் கூற்றுக்கள், பணப்பாய்ச்சல், கணக்குக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் (நிதிக்கூற்றுக்கள்) இலங்கை கணக்கீட்டு தரநியமங்களுடன் பொருந்தக் கூடியவைகளாகும்.

இந்த நிதிக்கூற்றுக்கள் வரலாற்று செலவின எண்ணக்கருவின் அடிப்படையில் இலங்கை ரூபா பெறுமானத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.2 ஒப்பீட்டுத் தகவல்கள்

கூட்டுத்தாபனம் கணக்குக் கொள்கைகளை இணங்கத்தக்க வகையில் பிரயோகித்துள்ளதுடன் முந்திய வருடத்தில் பயன்படுத்தப்பட்ட கொள்கைகளுக்கும் முரணின்றி அவற்றை பயன்படுத்தியுள்ளது. நடப்பு ஆண்டின் முன்வைப்பை உறுதிப்படுத்துவதற்கு தேவைப்படும் இடங்களிலெல்லாம் முந்திய வருடத்தின் பெறுமானங்கள் மீண்டும் எடுத்தியம்பப்பட்டுள்ளன.

## 2.3 வெளிநாட்டு நாணய கொடுக்கல்வாங்கல்

வெளிநாட்டு பரிமாற்றத்தை உள்ளடக்கிய அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் அந்த கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்படும் சமயத்தில் காணப்படும் நாணயமாற்று விகிதத்தின் அடிப்படையில் ரூபா பெறுமானத்திற்கு மாற்றியமைக்கப்படுகின்றது. வருமான கூற்று தினத்தன்று வெளிநாட்டு நாணயப் பெறுமானத்தில் பெயரிடப்பட்ட அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறித்த தினத்தன்று உள்ள நாணய மாற்று விகிதத்திற்கு மாற்றப்படுகின்றன. இந்த மாற்றம் காரணமாக ஏற்படும் ஏதாவது இலாபம் /இழப்புக்கள் வருமானக் கூற்றில் கையாளப்படுகின்றன.

## 2.4 வரி விதிப்பு

### (a) நடைமுறை வரிகள்

வருமான வரிக்கான ஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உள்ள வருமான மற்றும் செலவின மூலங்களை அடிப்படையாகக் கொண்ட அதேவேளை, இந்த வரி **2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க வருமான வரிச் சட்டத்திற்கும் அதன் 3ம் இலக்க திருத்த சட்ட ஏற்பாட்டுக்கும் அமைய** கணக்கிடப்படுகின்றது. கூட்டுத்தாபனம் பெறும் வருமானத்தில் 35 சதவீதத்தை வருமான வரியாக செலுத்த கடமைப்பட்டுள்ளது.

### (b) ஒத்திவைக்கப்படும் வரிவிதிப்பு

ஒத்திவைக்கப்படும் வரிவிதிப்புச் சலுகையானது பொறுப்புடைமை முறையின் அடிப்படையில் வழங்கப்படுகின்றது. நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள அமுலில் உள்ள வரி விகிதத்திற்கு ஏற்ப கணக்கிடப்பட்டுள்ள ஒத்திவைக்கப்படும் வரி குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் பல்வேறு வடிவங்களில் வருமான வரிக்காக ஒதுக்கப்படும் அனைத்து பொருட்களினதும் தற்காலிக மாற்றங்களுக்கு தாக்கம் செலுத்தும்

பிரயோசனப்படுத்தக் கூடிய முன்னோக்கி கொண்டுவரப்பட்ட அசாதாரண வரி இலாபத்தினதும் குறைக்கத்தக்க அனைத்து தற்காலிக மாற்றங்களுக்கும் எதிராக இடம்பெறக் கூடிய வரி வருமானத்தினதும் பெறுமானத்திற்கு முன்நோக்கி கொண்டு வரக்கூடிய அசாதாரண வரி வருமானமும் குறைக்கக் கூடிய அனைத்து தற்காலிக மாற்றங்களுக்குமான ஒத்திவைப்பு வரிச் சொத்துக்களும் இனங்காணப்பட்டுள்ளன. முன்னோக்கி கொண்டு வரப்பட்ட ஒத்திவைப்பு வரிச் சொத்துக்களின் பெறுமானம் அனைத்து நிலுவை கூற்றுத் தினத்திலும் சுருக்கமாக குறிப்பிடப்பட்டு பிரயோசனப்படுத்துவதற்கு உள்ள ஒத்திவைப்பு வரிக்குப் போதுமான வரிச் சொத்துக்களைப் பேணி பெற்றுக் கொள்ளப்படும் மேலதிக இலாபமற்ற சொத்துக்கள் முதலாவது ஒதுக்கீடுகளில் இருந்து குறைக்கப்படும்.

### 2.5 நிலுவைக் கூற்றுத் தினத்தின் பின்னர் நிகழும் நிகழ்ச்சிகள்

நிலுவைக் கூற்று தினத்தின் பின்னர் நிகழும் அனைத்து பொருள்சார் நிகழ்வுகளும் கருத்திற் கொள்ளப்படுவதோடு பொருத்தமான சீர்திருத்தங்கள் அல்லது வெளிப்பாடுகள் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2.6 கடன்பற்றுச் செலவு

கடன்பற்றுச் செலவானது குறிப்பிட்ட காலப் பகுதியில் ஏற்பட்ட ஒரு செலவினமாக இனங்காணப்படுகின்றது.

### 2.7 சரக்கு இருப்புக்கள்

நுகரக்கூடிய பண்ட இருப்புக்கள் கொள்வனவு விலையில் குறிப்பிடப்படுகின்றது. வழக்கில் இல்லாத, மெதுவாக நகரத்தக்க, குறைபாடான பண்ட இருப்புக்களுக்காக தேவைப்படும் போது ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

## 3. சொத்துக்களின் மதிப்பீடும் அவற்றின் அளவீட்டு அடிப்படைகளும்

### 3.1 சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணம்

சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணம் மீதான செலவினம் திரட்டப்பட்ட தேய்மானத்தைக் குறைத்துக் கொண்டு குறிப்பிடப்பட்டுள்ளது.

சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணம் மீதான செலவினம் என்பது அவற்றின் இயக்க நிலைக்காக அல்லது அதன் உத்தேச பயன்பாட்டுக்காக சொத்துக்களை கொண்டுவரும் போது ஏற்படும் ஏதாவது செலவினங்களுடன் கூடிய கொள்வனவு அல்லது நிர்மானச் செலவினமாகும்.

ஏற்க நேரிடும் ஏதாவது பிரதிச் செலவினமானது சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணத்தின் எதிர்கால பொருளாதார பயன்களை அதிகரிக்கும் போது மாத்திரமே மூலதணமயமாக்கப்படுகின்றது. ஏனைய அனைத்து செலவினங்களும் வருமானத்திற்காக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

ஏதாவது மீள்கணிப்பீட்டு மிகையானது ஆரம்பத்தில் அதன் சொத்துப் பெறுமானம் குறையும் போது அல்லது இலாபம் அல்லது இழப்பாக இனங்காணப்படும் போது மாத்திரமே மீள்கணிப்பீட்டு கையிருப்புக்கள் நிலுவைப் பத்திரத்தில் மூலதன கையிருப்பாக சேர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

சொத்துக்களின் பெறுமதி மீள்கணிப்பிடப்பட்டு அவற்றின் மாற்றங்கள் நேரடியாகவோ அல்லது அதற்கு முன்னர் அந்த சொத்துக்களின் மிகை, மீள்கணிப்பீட்டு இருப்பில் மிகைக்குப் பொருந்திய விதத்திலோ இருக்கும் சந்தர்ப்பத்தைத் தவிர மீள்கணிப்பீட்டின் மாற்றம் இலாபமாகவோ இழப்பாகவோ கருதப்படமாட்டாது.

## 3.2 தேய்மானம்

தேய்மானம் ஒரு நேர்கோட்டு அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது. சொத்துக்களின் தேய்மானப் பெறுமானம் கீழ்வருமாறு மதிப்பிடப்படுகின்றது.

| பெயர் | தேய்மான வீதம் |
|---|---|
| கட்டடம் | 2.5% |
| இயந்திரம் மற்றும் உபகரணம் | 7.5% |
| இசைக் கருவி | 10% |
| மோட்டார் வாகனங்கள் | 25% |
| தளபாடம், கருவி, | 10% |
| பதிவு நாடாக்கள் | 33.33% |
| ஒலிப் பண்பலை உபகரணம் | 7.5% |
| ஒலிக்கடத்திகள் | 7.5% |
| கணிணி உபகரணம் | 50% |
| சிறு சாதனங்கள் | 50% |

சொத்துக்களின் எஞ்சிய பெறுமானங்கள், அதன் பயன்மிக்க ஆயட்காலம் மற்றும் தேய்மான முறைகள் ஒவ்வொரு நிதியாண்டின் நிறைவிலும் மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமான விதத்தில் சீர்திருத்தப்படுகின்றன.

## 3.3 (a) குத்தகைகள்

### நிதிக் குத்தகைகள்

அனைத்து ஆபத்துமிக்க மற்றும் பயன்மிக்க குத்தகை உரிமை பின்னர் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்படும் குத்தகை சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அவற்றின் நிதிப் பெறுமாணத்திற்கு சொத்துக்கள், இயந்திரம் மற்றும் உபகரணத்தின் கீழ் மூலதனமயமாக்கப்படும் அதேவேளை, அந்த சொத்துக்களை பயன்படுத்தும் போது கூட்டுத்தாபனம் நன்மையடைவதற்கு எதிர்பார்க்கும் முறைக்கு ஏற்ற விதத்தில் தேய்மானம் கணிப்பிடப்படும்.

குத்தகை உரிமையாளருக்கு செலுத்தப்படும் ஆரம்பக் கொடுப்பனவு பொறுப்புடைமையாக எடுத்துக்காட்டப்படும். பொறுப்புடைமையின் எஞ்சிய நிலுவை மீது நிலையான வட்டி வீதமொன்றை பெற்றுக் கொள்ளும் வகையில் குத்தகைக் கொடுப்பனவுகளுக்கு அமைய நிதிக் கட்டணங்களுக்கும் குத்தகைப் பொறுப்பு குறைப்புக்கும் இடையில் பகிரப்படுகின்றது. குத்தகை கால எல்லைக்கு ஏற்ப செலுத்த வேண்டிய வட்டித் தொகை ஸ்திரமற்ற கணக்குகளுக்கு மாற்றப்படுகின்றது. ஒவ்வொரு நிதியாண்டிற்கும் பொருந்தக்கூடிய குத்தகை கடப்பாடுகள் மீதான வட்டி குறிப்பிட்ட காலப்பகுதியில் டிஜிட் முறையின் அடிப்படையில் வருமானக் கூற்றுக்கு அறவிடப்படுகின்றது.

குத்தகைக்கு இடப்பட்ட சொத்துக்களின் அபிவிருத்தி மீதான செலவினம் மூலதனமயமாக்கப்படுதல், குத்தகை விருத்தி பற்றிய விடயங்களை வெளியிடுதல், பொருத்தமற்ற காலப் பகுதிக்கு கூடுதலான குத்தகை அல்லது கணக்கிடப்பட்ட பயன்மிக்க ஆயுட் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் என்பவற்றின் அடிப்படையில் தேய்மானம் கணிப்பிடப்படுகின்றது.

### 3.4 வர்த்தகம் மற்றும் ஏனைய கிடைப்புக்கள்

கடனாளிகள் மற்றம் ஏனைய கிடைப்புக்கள் அறவிடமுடியாக் கடன் மற்றும் அறவிடமுடியாக் கடன்களுக்கான ஒதுக்கீடுகளைக் கொண்டு கணிப்பிடப்பட்டுள்ள பெறுமாணத்தில் மதிப்பிடப்பட்டு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

### 3.5 பணம் மற்றும் பண பதிலிகள்

பணப் பாய்ச்சல் கூற்றானது மறைமுக முறையொன்றை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. பணம் மற்றும் பண பதிலிகள் என்பது கையிலுள்ள பணமும், எந்த நேரத்திலும் வங்கியிலிருந்து பெறக்கூடிய வைப்புக்களும், குறுங்கால அடிப்படையிலான பணமாக்கக் கூடிய முதலீடுகளுமாகும். பணப் பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக பணம் மற்றும் பண பதிலீடுகள் கையிலுள்ள பணத்தையும், வங்கிகளில் உள்ள வைப்புக்களையும், குறுங்கால அடிப்படையில் மிகவும் இலகுவாக பணமாக்கக் கூடிய முதலீடுகளையும், வங்கிப் மிகைப் பற்றுக்களையும் உள்ளடக்கியுள்ளன.

## 4. பொறுப்புக்களும், ஏற்பாடுகளும்

ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புக்கள் அந்த ஐந்தொகைத் தினத்திலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்குள் அல்லது கோரும்போது செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளாகும். நீண்டகால பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளவை ஐந்தொகையின் தினத்திலிருந்து ஒரு வருடத்திற்கு பின்னர் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளாகும்.

### 4.1 வியாபாரமும் செலுத்தவேண்டிய ஏனையவையும்

வியாபாரமும் செலுத்த வேண்டிய ஏனையவையும் பற்றிய விடயம் செலவின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 4.2 மூலதனப் பொறுப்பும் தற்செயலான நிகழ்ச்சிகளும்

கூட்டுத்தாபனத்தின் மூலதனப் பொறுப்பு மற்றும் தற்செயலான நிகழ்ச்சிகள் கணக்குகளுடன் உள்ள அந்தந்தக் குறிப்புக்கள் மூலம் எடுத்தியம்பப்பட்டுள்ளன.

## 4.3 ஓய்வுபெறும் போது அடையும் நன்மைகள் மீதான கடப்பாடுகள்

### 4.3.1 அனுகூலத் திட்டம் பற்றிய வரைவிலக்கணம் - ஓய்வில் பணிக்கொடை

பணிக்கொடை என்பது வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ள ஒரு அனுகூலத் திட்டமாகும். சம்பந்தப்பட்ட சட்டமூலத்திற்கு அமைய பணிக்கொடையை வழங்க கூட்டுத்தாபனம் கடப்பட்டுள்ளது. இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக கணக்குத் தரநியமம் 16 ஈ பின்னிணைப்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ள சூத்திரத்தைப் பயன்படுத்தி கணிப்பிடக்கூடிய விதத்தில் ஒரு சட்ட ஏற்பாடு ஐந்தொகையில் காணப்படுகின்றது. வருடத்தின் ஆரம்பத்தில் முன்னோக்கி கொண்டுவரப்படும் ஒதுக்கீட்டுக்கும் மேற்கொள்ளப்படும் தூய கொடுப்பனவுக்கும் இடையிலான மாற்றத்தை குறைக்கவல்ல ஒதுக்கீடு வருட நிறைவில் வருமானக் கூற்றில் குறிப்பிடப்படுகின்றது.

| | |
|---|---|
| தள்ளுபடி வீதம் | 11.00 % |
| எதிர்பார்க்கும் சம்பள அதிகரிப்பு வீதம் | 5.00 % |
| ஊழியர் புறழ்வு வீதம் | 1.00 % |

பணிக்கொடை பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக வெளியிலிருந்து நிதி பெற்றுக் கொள்ளப்படுவதில்லை. இந்த விடயம் ஐந்தொகையின் நடைமுறையற்ற பொறுப்புக்களின் கீழ் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

### 4.3.2 பங்களிப்பத் திட்ட வரைவிலக்கணம்- ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பும், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியமும்

சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் படி ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புச் செய்ய தகுதி பெற்றுள்ளனர். ஊழியர்களின் மொத்த சம்பளத்தில் 15 சதவீதத்தையும், 3 சதவீதத்தையும் முறையே ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் கூட்டுத்தாபனம் பங்களிப்புச் செய்கின்றது.

### 4.3.3 அரசாங்க நிதியொதுக்கீடு

அரசாங்க நிதிக்கூற்றில் வருமானத்தின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அரசாங்க நிதி ஒதுக்கீடானது ஆரம்பத்தில் ஐந்தொகையில் நடைமுறையில்லா பொறுப்புக்களாகவும், ஒத்திவைக்கப்படும் வருமானமாகவும் காட்டப்படுகின்றது. இந்த நிதியுதவியைப் பெறுவதற்காக செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளின் உரிமைகளும், அதற்காக ஈடுபடுத்தப்பட் தொகையும் ஐந்தொகையில் காட்டப்பட்டப்படுகின்றது.

சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுடன் தொடர்புடைய உதவித் தொகையானது அந்த சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணத்தின் நேர்கோட்டு அடிப்படையிலான ஒரு முறையில் வருமானத்திற்கு ஒதுக்கப்படுகின்றது.

| பெயர் | கடன்தீர் வீதம் |
| --- | --- |
| கட்டடம் | 2.5% |
| இயந்திரம் மற்றும் உபரகணம் | 7.5% |
| மோட்டார் வாகனங்கள் | 25% |
| தளபாடம் மற்றும் கருவி | 10% |
| நாடாக்கள் | 33.33% |
| ஒலிப் பண்பலை உபகரணம் | 7.5% |
| ஒலிக்கடத்திகள் | 7.5% |

# 5. வருமானக் கூற்று

## 5.1 வருமானமும் செலவுகளும்

### 5.1.1 விற்பனைப் புறழ்வு

கூட்டுத்தாபனத்தின் விற்பனைப் புறழ்வு வானலை நேர விற்பனையின் பெறுமானமாகும்.

### 5.1.2 வருமானத்தை இனங்காணுதல்

கூட்டுத்தாபனத்திற்கு பொருளாதார நன்மை கிடைக்கக்கூடிய விதத்தில் வருமானம் இனங்காணப்பட்டுள்ளதோடு, அந்த வருமானத்தை நம்பகரமான முறையில் மதிப்பிடலாம்.

சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை நீக்குவதால் ஏற்படும் ஒரு வருவாயை அடிப்படையாகக் கொண்ட பயன்கள் அல்லது இழப்புக்கள் வருமானக் கூற்றில் கணக்கிடப்பட்டுள்ளன.

வரி வருமானம் சரியான அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளது.

ஏனைய வருமானமும் சரியாக இனங்காணப்பட்டுள்ளது.

### 5.1.3 செலவினத்தை இனங்காணுதல்

குறிப்பிட்ட பொருட்களின் வருமானம் மீதான பயன்களுக்கும் செலவினங்களுக்கும் இடையிலான ஒரு நேரடித் தொடர்பின் அடிப்படையில் செலவுகள் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

1. வர்த்தகத்தை வழிநடத்துதவதற்கும் வினைத்திறனை அதிகரிக்கும் விதத்தில் சொத்துக்களையும், இயந்திரங்களையும், உபகரணங்களையும் நிர்வகிப்பதற்கும் ஏற்படும் அனைத்து செலவினங்களும் குறிப்பிட்ட வருடத்திற்காக வருவாயில் சேர்க்கப்பட்டுள்ளன.
2. வருமானக் கூற்றை முன்வைக்கும் நோக்கத்திற்காக செலவின முறையின் தொழிற்பாடானது கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகையை ஓரளவு எடுத்துக் காட்டுகின்றது என்ற அபிப்பிராயத்தை கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் சபை கொண்டுள்ளது.

## 6. சம்பந்தப்பட்ட தரப்பின் கொடுக்கல்வாங்கல்கள்.

இந்த நிதிக் கூற்றுக்களின் காலப் பகுதியில் சம்பந்தப்பட்ட எந்த தரப்பும் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடவில்லை.

| **பெயர்** | **பதவி** | **சம்பந்தப்பட்ட தரப்பின் கொடுக்கல்வாங்கல்** |
|---|---|---|
| திரு. ஹட்சன் சமரசிங்க | தலைவர் | இல்லை |
| கலாநிதி.ஹரிஸ்சந்திர விஜேதுங்க | சபை உறுப்பினர் | இல்லை |
| திரு. குமாரதாச சப்புத்தந்திரி | சபை உறுப்பினர் | இல்லை |
| திரு. மனோஜ் பீரிஸ் | சபை உறுப்பினர் | இல்லை |
| திருமதி.தர்ஷன சேனநாயக்க | திரைசேரி உறுப்பினர் | இல்லை |
| திரு. சமந்த வெலிவேரிய | பணிப்பாளர் நாயகம் | இல்லை |
| திரு. ஏராநந்த ஹெட்டியாரச்சி | பிரதிப் பணிப்பாளர் நாயகம் | இல்லை |

## நிதிக் கூற்றுக்கான குறிப்புக்கள்

### 1. வருமானம்

| | **2011** | **2010** |
|---|---|---|
| வானலை நேர விற்பனை – ஆசிய சேவை | 21,019,372 | 31,560,998 |
| வானலை நேர விற்பனை – டி.டபிள்யு.ஆர் | 108,358,419 | 114,901,933 |
| வானலை நேர விற்பனை – உள்நாட்டு சேவை | 362,623,878 | 309,676,854 |
| தயாரிப்பு கட்டணங்கள் - உள்நாட்டு சேவை | 4,326,631 | 4,051,097 |
| மரண அறிவித்தல்கள் | 5,150,847 | 5,635,647 |
| வானலை நேர விற்பனை – பீ.பீ.சி | 19,799,800 | 22,945,756 |
| வானலை நேர விற்பனை - FEBA | 2,783,599 | 1,618,728 |
| வானலை நேர விற்பனை – குடும்ப வானொலி | 26,899,336 | 14,083,197 |
| சிற்றி என்ட் கில்ட் பாடநெறிக் கட்டணங்கள் | | 162,500 |
| | **550,961,883** | **504,636,711** |

### 2. ஏனைய வருமானம்

| | **2011** | **2010** |
|---|---|---|
| கூட்டுத்தாபன வெளியீடுகளின் விற்பனை | 186,278 | 56,039 |
| கடன்கள் மற்றும் ஏனையவை மீதான வட்டி | 4,390,808 | 3,436,783 |
| பல்வகை வருமானம் (ஏனையவை) | 43,185,345 | 25,059,337 |
| திரும்பிய காசோகைக்காக விளம்பர நிறுவனங்களிடமிருந்து பெற்ற தண்டப் பணம் | 35,647 | 22,950 |
| வீட்டு வாடகை | 6,100 | 6,310 |
| சேர்க்கிட் பங்கலா மூலமான வருமானம் - நிவஹன மற்றும் அம்பேவல | 821,463 | 702,168 |
| விசேட ஒலிப்பதிவு | 228,575 | 169,194 |
| ரேடியோ வொய்ஸ் குத்தகை வாடகையும், சேவைக் கட்டணங்களும். | 32,939,172 | 31,719,960 |
| தாமத அனுமதிபெறுதலுக்கான தண்டப் பணம் | 39,375 | 1,954 |
| வானொலி இயந்திர இறக்குமதியாளர்கள், விற்பனையாளர்கள், பொறுத்துனர்கள் மற்றும் திருத்துபவர்களிடமிருந்து பெற்ற அனுமதிக்கான கட்டணம் | 5,272,545 | 2,048,525 |
| கெசட் (ஒலிநாடா) விற்பனை | 13,273,234 | 10,046,408 |
| தண்டக் கணக்கு | 12,487 | 19,384 |
| அனுமதிக் கட்டணங்களுக்கான அரசாங்க நிதி | 115,000,000 | 150,000,000 |
| காணி விற்பனை | | 2,343,665 |
| அரசாங்க மற்றும் ஜப்பான் நிதிக்கான கொடுப்பனை தீர்த்தல் | 90,443,516 | 93,452,441 |
| | **305,834,543** | **319,085,118** |

**2.1** வானொலி அனுமதிப்பத்திரத்திற்கு பகரமாக அரசாங்கத்திடமிருந்து நிதியுதவியாக 115 மில்லியன் ரூபா பெறப்பட்டது.

## 3. விநியோகச் செலவு

| | 2011 | 2010 |
|---|---|---|
| (உள்ளூர்) வானலை நேர விற்பனை மீதான கழிவு | 48,059,774 | 44,028,961 |
| (வெளிநாட்டு) வானலை நேர விற்பனை மீதான கழிவு | 2,710,307 | 4,539,790 |
| அவசர நேரவரையீட்டு கட்டணங்கள் | 27,000 | 31,625 |
| மோசமான மற்றும் ஐயக்'கடன்களுக்கான ஏற்பாடு | 12,055,788 | 2,446,712 |
| உரிமத்தொகை செலவினங்கள் | 2,193,550 | (230,720) |
| வர்த்தக ஊக்குவிப்பு செலவினம் | 3,596,792 | 5,743,792 |
| | **68,643,211** | **56,560,161** |

## 4. நிர்வாக செலவு

| | 2011 | 2010 |
|---|---|---|
| கொடுப்பனவுகள் - தலைவர் மற்றும் கூட்டுத்தாபன உறுப்பினர்கள் | 660,000 | 570,000 |
| சம்பளங்கள், கூலிகள் மற்றும் கொடுப்பனவுகள் | 293,820,836 | 291,910,275 |
| ஈ.பீ.எவ் மற்றும் ஈ.ரீ.எவ் ஆகியவற்றுக்கான பங்களிப்பு | 51,392,952 | 51,208,540 |
| பணியாளர்களின் மேலதிகள நேரம் | 18,468,549 | 17,229,266 |
| பகுதிநேர ஊழியர்கள் | 47,299,762 | 45,921,218 |
| ஒப்பந்த ஊழியர்களின் ஊதியம் | 4,344,670 | 4,368,448 |
| பணியாளர்களுக்கான பயிற்சிக் கட்டணங்கள் (உள்நாட்டு) | 65,000 | 1,073,825 |
| பயண மற்றும் வாழ்க்கைப்படி (உள்நாட்டு, வெளிநாட்டு) | 2,156,871 | 1,615,040 |
| விடுமுறை நாளுக்கான கொடுப்பனவு | 2,719,072 | 3,599,764 |
| பணிக்கொடை | 6,071,359 | 3,566,675 |
| தலைவர் மூலமான களியாட்டம் | 450,525 | 410,521 |
| பணிப்பாளர் நாயகம் மூலமான களியாட்டம் | 174,221 | 152,156 |
| நலன்புரி | 2,363,039 | 3,696,177 |
| மருத்துவ சேவை | 344,243 | 298,227 |
| பொதுவான கட்டணங்கள் | 3,445,350 | 3,975,253 |
| வாடகைப் பெறுமாணமும், வரிகளும் | 6,187,604 | 5,280,673 |
| காப்புறுதி | 562,051 | 1,683,579 |
| கணக்காய்வு கட்டணங்கள் | 500,000 | 600,000 |
| சட்ட கட்டணங்கள் | 2,760,998 | 2,524,978 |
| வெளியீடுகளும், பருவ வெளியீடுகளும் | 459,635 | 561,342 |
| பணிக்கொடை, நீதிமன்ற வழக்கு மற்றும் ஏனையவற்றுக்கான தண்டப் பணம் | 38,783 | 3,146,478 |
| | **444,285,521** | **443,392,433** |

**4.1** கூட்டுத்தாபனம் 2011 ஆம் ஆண்டுக்காக ஊழியர்களின் உறவினர்களது மரண அறிவித்தல்களை ஒலிபரப்புவதற்காக 1,063,962.00 ரூபாவை ஏற்க நேரிட்டது. இந்த அறிவித்தல்கள் வழக்கிலுள்ள திட்டத்தின் அனுமதிக்கு இணைவாக ஒலிபரப்பட்டன. இது கூட்டுத்தாபனத்தால் ஒவ்வொரு வருடமும் கடைபிடிக்கப்படும் நடைமுறையாகும்.

**4.2 நிலுவையிலுள்ள சட்ட வழக்குகள்**

2011 ஆம் ஆண்டு முதல் இதுவரை கீழ் குறிப்பிடப்படுவது போல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக பத்து நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன.

ஒரு வழக்கு உயர் நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ளது. மூன்று வழக்குகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ளன. இதில் - டி.சீ வழக்கில் வாதிக்கு சட்டரீதியிலான வட்டியுடன் 10,000,000/- ரூபாவை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மீள வழங்க வேண்டும் என்ற 23089/MR என்ற இலக்கத்தைக் கொண்ட டி.சீ வழக்கு தொடர்பான தீர்ப்பை ஒதுக்கி வைக்குமாறு கூட்டுத்தாபனத்தால் கோரும் மேன்முறையீடும் அடங்குகின்றது.

ஒரு வழக்கு மஜிஸ்ட்ரேட் நீதிமன்றிலும் மேலும் வழக்குகள் தொழிலாளர் திணைக்கள தீர்ப்பாயத்தில் சென்று கொண்டிருக்கின்றன.

## 5. ஏனைய இயக்க செலவினம்

| | 2011 | 2010 |
|---|---|---|
| நிகழ்ச்சிக்கான செலவினம் | 5,249,348 | 4,154,828 |
| வேளிக்கள ஒலிபரப்பு அமைப்புக்களுடனான பங்களிப்பு | 482,496 | 478,296 |
| செய்திச் சேவைகள் மற்றும் செய்திச் சுருக்கங்கள். | 1,382,395 | 1,225,953 |
| விளம்பரமும் பகிரங்கப்படுத்தலும் | 763,932 | 6,901,399 |
| மின்சாரம் மற்றும் எரிசக்தி | 129,729,088 | 105,460,213 |
| தபால், டெலிக்ராம்கள் மற்றும் தொலைபேசிகள் | 9,294,402 | 10,625,152 |
| அச்சக மற்றும் காகிதாதிக | 5,715,345 | 5,124,905 |
| மோட்டார் வாகன இயக்க செலவினங்கள் | 9,448,491 | 8,905,074 |
| ஒலிபரப்புக் கருவிகளின் திருத்தங்களும், நிர்வகிப்பும் | 7,819,275 | 14,084,933 |
| இசைக் கருவிகளின் திருத்தங்களும், நிர்வகிப்பும் | 228,565 | 24,878 |
| தளபாட பொருத்தலுக்கா திருத்தங்களும், நிர்வகிப்பும் | 911,375 | 603,619 |
| கட்டட மற்றும் தோட்டத்தை திருத்தியமைத்தலும், நிர்வகிப்பும் | 17,961,832 | 7,282,015 |
| தேய்மானம் | 79,385,878 | 77,949,423 |
| தனியார் பாதுகாப்புச் சேவை | 119,000 | 169,000 |
| ஒலிநாடா செலவினம் | 2,578,493 | 1,647,381 |
| வாகனங்களுக்கான வாடகைக் கட்டணம் | 17,712,537 | 22,901,863 |
| செய்மதிக் கட்டண அதிகரிப்பு | 6,468,860 | 2,500,000 |
| பொருளாதார சேவைக் கட்டணங்கள் | 6,513,529 | 5,779,257 |
| முத்திரை வரி | 97,476 | 167,966 |
| வானொலிப் பண்பலைக் கட்டணங்கள் | 193,878 | |
| | **302,056,195** | **275,986,153** |

## 6. நிதிச் செலவு

| | 2011 | 2010 |
|---|---|---|
| வங்கிக் கட்டணங்கள் | 550,728 | 619,607 |
| மிகைப் பற்றுக்கான வட்டி | 1,271,393 | 5,847,394 |
| கடன்பற்று வரி | 7,698 | 34,176 |
| பரிமாற்றம் மீதான வருவாயும் (நட்டமும்) | 76,127 | (117,752) |
| கடன் அட்டைக்கான கழிவு | 54,238 | 43,137 |
| குத்தகை வட்டி | 3,436,439 | 3,335,651 |
| | 5,396,622 | 9,762,213 |

## 7. <u>வருமான வரி செலவினங்கள்</u>

| | 2011 | 2010 |
|---|---|---|
| கணக்கீட்டு வருமானம் /நட்டம் | **36,414,877** | **38,020,869** |
| **சேர்க்கவும்** | | |
| **அனுமதிக்க முடியாத பொருட்கள்** | | |
| தேய்மானம் | 79,385,878 | 77,949,423 |
| வாராக் கடன்களுக்கான ஏற்பாடுக | 12,055,788 | 2,446,712 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 6,071,359 | 3,566,675 |
| களியாட்ட மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் | 624,746 | 562,677 |
| அரசாங்க உதவித் தொகையின் கடன் தீர்ப்பு | (90,443,516) | (93,452,441) |
| பொருளாதார சேவை கட்டணங்கள் | 6,513,529 | 5,779,257 |
| நிவஹன வருமானம் மற்றும் ஏனையவற்றுக்கான ஏற்பாடு | | |
| | **14,207,784** | **(3,147,697)** |
| **குறைக்கவும்** | | |
| **அனுமதிக்கக் கூடிய செலவினங்கள்** | | |
| மூலதணக் கொடுப்பவு | 69,330,240 | 60,841,480 |
| குத்தகை வாடகை | 11,296,704 | 7,072,842 |
| பணிக்கொடை கொடுப்பனவு | 8,966,450 | 22,849,690 |
| அரசாங்க உதவித் தொகை | 115,000,000 | 150,000,000 |
| | **204,593,394** | **240,764,012** |
| வரிசெலுத்தக் கூடிய வருமானம் /நட்டம | **(153,970,733)** | **(205,890,840)** |
| முன்னோக்கி வந்த வரி இழப்புக்கள் | 2,033,659,405 | 2,239,550,245 |
| | | |
| **முன்னோக்கி கொண்டு வரப்பட்ட மொத்த வரி இழப்புக்கள்** | **2,187,630,138** | **2,033,659,405** |

வருமானத்திலிருந்து கிடைக்கும் இலாபத்தில் 35 சதவீதத்தை வருமான வரியாக செலுத்த கூட்டுத்தாபனம் கடப்பட்டுள்ளது. எனினும், கூட்டுத்தாபனத்தின் திருத்தப்பட்ட வரி தொடர்பில் வருமான வரிக் கணக்கில் எந்த ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**8.**

### 8.1 <u>சொத்து, இயந்திரத் தொகுதி மற்றும் சாதனங்கள்</u>

| **மொத்த நடப்புக் கணக்கு**<br>**செலவில்** | **01.01.2011 அன்று இருந்த நிலுவையின் படி**<br>**ரூபா.** | **சேர்ப்புக்கள்/ மாற்றீடுகள்**<br>**ரூபா.** | **முடிவுறுத்தல்கள்/ மாற்றீடுகள்**<br>**ரூபா.** | **31.12.2011 அன்று இருந்த நிலுவையின் படி**<br>**ரூபா.** |
|---|---|---|---|---|
| நிலம் | 7,713,229 | 51,006 | | 7,764,234 |
| கட்டடம் | 166,255,546 | 1,773,929 | | 168,029,475 |
| இயந்திரத் தொகுதிகள் | 564,073,238 | 6,879,092 | | 570,952,330 |
| இசைக் கருவிகள் | 6,673,090 | 150,350 | | 6,823,440 |
| மோட்டார் வாகனங்கள் | 11,416,000 | 882,000 | | 12,298,000 |
| தளபாடம், நிலையுறுதி மற்றும் அலுவலக சாதனம் | 126,346,117 | 3,232,528 | | 129,578,645 |
| ஓலிப்பதிவுத் தட்டுக்கள் | 24,513,921 | 16,110 | | 24,530,031 |
| ஓலிப் பண்பலை | 843,632,752 | 12,312,365 | | 855,945,117 |
| ஓலி மின்கடத்திகள் | 1,267,232,187 | 313,154 | | 1,267,545,341 |
| கணிணி சாதனம் | 24,053,195 | 2,945,599 | | 26,998,794 |
| நூலகப் புத்தகங்கள் | 428,815 | 5,518 | | 434,333 |
| இலகுபடுத்தல் கருவிகள் | 91,555 | 15,880 | | 107,435 |
| | **3,042,429,645** | **28,577,529** | **-** | **3,071,007,174** |
| 8.2 **தீர்வை அடிப்படையிலான சொத்துக்கள்** | | | | |
| மோட்டார் வாகனங்கள் | **26,996,999** | 37,250,000 | | 64,247,000 |
| | **26,996,999** | **37,250,000** | | **64,247,000** |
| **மொத்தம்** | **3,069,426,644** | **65,827,529** | **-** | **3,135,254,174** |

**8.3**

| விபரம் | 01.01.2011 அன்று இருந்த நிலுவையின் படி ரூபா. | காலத்திற்கான கட்டணம் / மாற்றீடுகள் ரூபா. | முடிவுறுத்தல்கள்/ மாற்றீடுகள் ரூபா. | 31.12.2011 அன்று இருந்த நிலுவையின் படி ரூபா. |
|---|---|---|---|---|
| கட்டடம் | 100,478,646 | 3,774,616 | | 104,253,262 |
| இயந்திரத் தொகுதிகள் | 454,885,236 | 5,614,484 | | 460,499,720 |
| இசைக் கருவிகள் | 6,457,490 | 59,418 | | 6,516,908 |
| மோட்டார் வாகனங்கள் | 4,498,312 | 14,345,687 | | 18,843,999 |
| தளபாடம், நிலையுறுதி மற்றும் அலுவலக சாதனம் | 84,403,487 | 7,754,469 | | 92,157,956 |
| ஒலிப்பதிவுத் தட்டுக்கள் | 24,477,058 | 29,731 | | 24,506,789 |
| ஒலிப் பண்பலை | 662,583,847 | 17,563,725 | | 680,147,572 |
| ஒலி மின்கடத்திகள் | 875,220,636 | 25,714,596 | | 900,935,232 |
| கணிணி சாதனம் | 19,266,333 | 4,516,745 | | 23,783,078 |
| இலகுபடுத்தல் கருவிகள் | 77,599 | 12,406 | | 90,006 |
| **மொத்தம்** | **2,232,348,644** | **79,385,878** | **-** | **2,311,734,522** |

**8.4**

| நிகர புத்தகத்தின் பெருமானங்கள் செலவில் | 2011 ரூபா | 2010 ரூபா |
|---|---|---|
| நிலம் | 7,764,234 | 7,713,229 |
| கட்டடம் | 63,776,213 | 65,776,900 |
| இயந்திரத் தொகுதிகள் | 110,452,610 | 109,188,002 |
| இசைக் கருவிகள் | 306,532 | 215,600 |
| மோட்டார் வாகனங்கள் | 57,701,001 | 33,914,688 |
| தளபாடம், நிலையுறுதி மற்றும் அலுவலக சாதனம் | 37,420,688 | 41,942,630 |
| ஒலிப்பதிவுத் தட்டுக்கள் | 23,242 | 36,863 |
| ஒலிப் பண்பலை | 175,797,546 | 181,048,905 |
| ஒலி மின்கடத்திகள் | 366,610,109 | 392011551 |
| கணிணி சாதனம் | 3,215,715 | 4786862 |
| இலகுபடுத்தல் கருவிகள் | 17,429 | 13,956 |
| நூலகப் புத்தகங்கள் | 434,333 | 428,815 |
| **மொத்தம்** | 823,519,652 | 837,078,001 |

**9. கூட்டுத்தாபனம் வரையறுக்கப்பட்ட லங்கா புவத் கம்பனியில் ஒரு மில்லியன் ரூபாவை முதலீடு செய்துள்ளது.**

**10. <u>சரக்கு இருப்புக்கள்</u>**

| | 2011 | 2010 |
|---|---|---|
| காகிதாதி மற்றும் அலுவலக உபகரணம் | 424,038 | 392,374 |
| வானொலி மற்றும் இலத்திரணியல் தொகுதி | 687,162 | 228,952 |
| மோட்டார் உதிரிப்பாகங்கள் | 664,307 | 735,235 |
| பொதுவான உதிரிப்பாகங்கள் | 2,064,070 | 1,776,415 |
| சரக்கிருப்புக் கட்டுப்பாட்டு கணக்கு | 6,124,608 | 6,215,155 |
| டீசல் மற்றும் மின்சாரம் | 1,796,966 | 705,128 |
| ஒலிநாடாக்கள் & இருவெட்டுக்கள் | 7,353,807 | 6,707,148 |
| துணை நிலையங்கள்-ஏக்கல | 9,996,710 | 9,996,710 |
| | **29,111,669** | **26,757,117** |

## 11. பணியாளர் கடன்கள், கொடுப்பனவுகள் மற்றும் பயணச் சரக்குகள்

| | 2011 | 2010 |
|---|---|---|
| பயணச் சரக்குகள் | 3,418,863 | 12,768,174 |
| ஊழியர்களுக்கான கடன்கள் | 7,110,048 | 7,967,217 |
| ஊழியர்களுக்கான ஏனைய முற்கொடுப்பனவுகள் | 17,348,663 | 15,741,171 |
| ஊழியர் கடனாளிகள் ஈ.பீ.எவ் | 336,863 | 347,181 |
| முற்கொடுப்பனவுகள் | 34,441 | 259,661 |
| விநியோகஸ்தர்களுக்கான முற்கொடுப்பனவு | 4,851,670 | 4,045,134 |
| சம்பளங்கள் மற்றும் கூலிகள் முற்கொடுப்பனவுக் கணக்கு | 5,000 | |
| | **33,105,549** | **41,128,538** |

## 12. பல்வகைக் கடனாளிகள்

| | 2011 | 2010 |
|---|---|---|
| சில்லறைக் கடனாளிகள் | 600,707 | 11,662,464 |
| மறுக்கப்பட்ட காசோலைகள் | 3,313,119 | 3,088,437 |
| நடைமுறைக் கணக்கு (தபால்மா அதிபர்)- மரண அறிவித்தல்கள் | 7,937,460 | 7,936,123 |
| மரண அண்பளிப்புக் கணக்கு | | 91,690 |
| லக்ஹன்டவுடனான கிளைக் கணக்கு | 12,807,862 | 12,807,862 |
| பொருள், சேவை வரி கட்டுப்பாட்டு கணக்கு | 237,267 | 109,575 |
| நிறுத்தி வைப்பு வரி | (8,767) | (124,962) |
| நடைமுறைக் கணக்கு (தபால்மா அதிபர்)- வானொலி அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 195,700 | 195,700 |
| தொங்கல் கணக்கு | 221,965 | 221,965 |
| தொங்கல் கணக்கு (காசாரளர்) | 281,110 | 111,808 |
| தொங்கல் கணக்கு (சந்தைப்படுத்தல் அதிகாரி அசாம்) | 5,713,250 | 5,713,250 |
| முற்கூட்டிய பணம் (நட்டஈடு) | 350,000 | 350,000 |
| ஒத்திவைப்பு வருமானம் | 5,381,898 | 2,927,219 |
| | **37,031,571** | **45,091,131** |

## 13. பணம் மற்றும் வங்கி நிலுவைகள்

| | 2011 | 2010 |
|---|---|---|
| இலங்கை வங்கி - மாத்தறை | 32,971 | 642,329 |
| மக்கள் வங்கி சர்வதேச பிரிவு | 19,752,934 | 8,619,388 |
| இலங்கை வங்கி - டொரின்டன் 265 | 7,672,004 | (9,364,327) |
| இந்திய அரச வங்கி | 391,678 | 3,434,090 |
| இலங்கை வங்கி - அனுராதபுரம் | - | 426,449 |
| இலங்கை வங்கி - கண்டி | 329,470 | 1,131,992 |
| நேஷன் ட்ரஸ்ட் வங்கி | 5,065,546 | 1,892,810 |
| இலங்கை வங்கி - டொரின்டன -307 | 7,578,136 | 1,724,483 |
| இலங்கை வங்கி - டொரின்டன -316 | 478,197 | 120,695 |
| பண சில்லரைச் செலவு | 633,565 | 607,055 |
| இலங்கை வங்கி - டொரின்டன்- 339 | 10,091,277 | 190,479 |
| இலங்கை வங்கி- மதுரை | 76,896 | 76,896 |
| கொமர்ஷல் வங்கி - டுப்ளிகேஷன் வீதி. | | 254,129 |
| இலங்கை வங்கி - கொத்மலை | | 215,908 |
| சேமிப்புக் கணக்கு (மக்கள் வங்கி) டொரிங்டன் | 75,841 | 72,872 |
| இலங்கை வங்கி - டொரிங்டன் -014(சனசும) | 322,147 | 350,443 |
| **ஓரக் கணக்கு Margin a/c** | 2,704,188 | 2,704,188 |
| நிலையான வைப்பு | 90,730,336 | 81,242,200 |
| இலங்கை வங்கி- யாழ்தேவி | | 2,557 |
| | **145,935,186** | **94,344,635** |

## 14. ஓய்வுக்கால பணிக்கொடை

| | 2011 | 2010 |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை | 154,469,646 | 173,752,661 |
| ஆண்டுக்கான ஏற்பாடு | 6,071,359 | 3,566,675 |
| வருடத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | 8,966,450 | 22,849,690 |
| முடிவு நிலுவை | **151,574,555** | **154,469,646** |

## 15. ஜப்பானிய அரசாங்க உதவித் தொகை

| | 2011 | 2010 |
|---|---|---|
| **ஆரம்ப நிலுவை** | 109,213,811 | 116,490,680 |
| வருடத்திற்கான கடன்தீர் நிதி | (6,751,990) | (7,276,869) |
| **முடிவு நிலுவை** | 102,461,821 | 109,213,811 |

## 16. ஆரசாங்க உதவித் தொகை

| | 2011 | 2010 |
|---|---|---|
| **ஆரம்ப நிலுவை** | 248,767,202 | 236,406,383 |
| **சேர்க்கவும்-** | | |
| வருடத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டவை | 77,570,400 | 100,000,000 |
| வருடத்திற்கான (உதவித்தொகை) கடன்தீர் நிதி | (81,834,726) | (86,175,572) |
| வருடத்திற்கான (ஒத்திவைக்கப்படும் செலவினம்) கடன்தீர் நிதி | (1,856,800) | (1,463,609) |
| **முடிவு நிலுவை** | 242,646,076 | 248,767,202 |

## 17. நிதிக் குத்தகை

| | 2011 | 2010 |
|---|---|---|
| நிதிக் குத்தகை (மோட்டார் வாகனங்கள் | 27,666,386 | 1,086,668 |
| **வருடத்தில் சேர்த்துக் கொள்ளவும்** | 43,950,060 | 33,652,560 |
| | 71,616,446 | 34,739,228 |
| குத்தகை வாடகை | 11,296,704 | 7,072,842 |
| | 60,319,742 | 27,666,386 |
| **குறைக்கவும்** | | |
| குத்தகை வட்டி தொங்கல் கணக்கு | 9,762,226 | 6,498,605 |
| | 50,557,516 | 21,167,781 |
| **நடைமுறைப் பொறுப்பு** | **10,722,324** | **4,496,426** |
| **நடைமுறையில்லா பொறுப்பு** | **39,835,192** | **16,671,355** |

## 18. கடன் வழங்குனர்கள்

| | 2011 | 2010 |
|---|---|---|
| வானலை நேர விற்பனை | 84,419,798 | 123,252,859 |
| வானலை நேர விற்பனை - உள்நாடு (ரஜரட்ட சேவை) | 1,033,748 | 1,058,558 |
| வானலை நேர விற்பனை - உள்நாடு (ருஹுனு சேவை) | 11,884 | 341 |
| வானலை நேர விற்பனை - உள்நாடு (மலையக சேவை) | 303,014 | 67,334 |
| வானலை நேர விற்பனை - உள்நாடு (கொத்மலை) | | 118,854 |
| | **85,768,444** | **124,497,945** |

**19. வரவேண்டியவைகள், முற்பணம் மற்றும் பல்வகை கடன் வழங்குனர்கள்**

| | 2011 | 2010 |
|---|---|---|
| தேசியப் பாதுகாப்புத் தீர்வை | 15,007,806 | 15,007,806 |
| சிரட்டப்பட்ட செலவினம் | 81,743,830 | 72,875,501 |
| ஊழியர் சேமலாப நிதி | 2,693,445 | 2,432,225 |
| தேசிய சேமிப்பு நிதியம் | (12,418) | (12,418) |
| செலுத்தப்படாத சம்பளங்களும், கூலிகளும் | 490,014 | 549,546 |
| சம்பாத்தியத்தின் போதான கொடுப்பனவு வரி | 97,392 | 187,603 |
| கடனாளிகள் கட்டுப்பாட்டு கணக்கு | | (259,552) |
| பல்வகைக் கடனீந்தோர் | 1,395,000 | 3,900,000 |
| பல்வகைக் கடனீந்தோர் (உரிமை கோரப்படாத காசோலைகள்) | 10,000 | |
| தேசிய பாதுகாப்பு நிதியம் | 2,835 | 2,835 |
| வைத்திருப்பு வரி | (30,106,015) | (27,074,350) |
| சந்தைப்படுத்தல் அதிகாரிகளின் பாதுகாப்பு வைப்பு | 160,704 | 138,427 |
| பெறுமதிசேர் வரிக் கட்டுப்பாட்டு கணக்கு | 27,717,437 | 28,390,268 |
| வரி விதிப்புக்கான ஏற்பாடு (பொருளாதார சேவைக் கட்டணம்) | 39,188,442 | 32,674,912 |
| மனிதநேய உதவிக் கணக்கு - “சுனாமி” | 322,147 | 350,443 |
| தேசத்தை கட்டியெழுப்புவது மீதான தீர்வை | 13,943,301 | 6,246,930 |
| டொய்ஷ வெல ரேடியோ | 16,337,306 | 51,025,565 |
| யாழ்தேவி புகையிரதப் பாதையின் நிர்மாணம் | | 2,557 |
| | **168,991,227** | **186,438,298** |

# 2011, டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவுபெற்ற ஆண்டுக்கான கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

TM/A/SLBC/FAC/2011 ஒக்டோர் 03-2012

தலைவர்,

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

---

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1966 இன் 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 27 ஆம் பிரிவு என்பவற்றுடன் வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)சீ பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2012 யூலை 18 ஆந் திகதி அதிகாரசபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுகளுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமை பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளர் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான

நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தினால் நிதிக்கூற்றுக்கனைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்ளப்பட்ட போதும், கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில் கொள்ளப்படவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும், பரப்பினையும், நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) நியம இலக்கம் 18 | நியமத்திற்கு முரணாக குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களின் பெறுமதி அடிப்படையில் அறவிடப்படுகின்ற பெறுமதி சேர்க்கப்பட்ட வரியான ரூபா 4,536,904 கிரயத்துடன் உள்ளடக்கப்பட்டு கணக்கு வைக்கப் பட்டமையால் சொத்துக்களின் பெறுமதி மற்றும் குத்தகைக் கடன்கொடுத்தோர் பெறுமதி என்பன மேற்படி பெறுமதியால் அதிகரித்திருந்தன. |
| (ஆ)நியம இலக்கம் 36 | 2006 ஆம் ஆண்டிலிருந்து இளைப்பாறிய உத்தியோகத்தர்களுக்காக செலுத்த வேண்டிய நிலுவை பணிக்கொடை தொகை ரூபா 11,756,859 ஆன போதும் 2011 திசெம்பர் 31 இல் இப்பொறுப்புக்களுக்காக கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் ஏற்பாடு முடிவுக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) நியம இலக்கம் 5 | தலைமை அலுவலகத்தின் இருப்பு மீதிகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 545,800 தொகையான மெதுவாக அசையும் இருப்பு உருப்படிகளை நியமத்திற்கு முரணாக முடிவுக் கணக்குகளில் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கசெட் நாடக்களும் சீடிக்களும் இறுதி இருப்பு மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தன. |

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டிற்கும் எதிர்வரும் ஆண்டிற்கும் கிடைக்கப் பெற்றிருந்த முறையே ரூபா 3,220,000 மற்றும் ரூபா 6,188,300 ஆகிய அன்டனா கோபுர குத்தகை வருமானம் மீளாய்வாண்டின் இலாபகரமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் ரூபா 9,408,300 ஆல் இலாபம் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டிற்குரிய 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 8,808,300 தொகை வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 1,425,250 உதவு தொகையை வருமானமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக நானாவித செலவுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத்தேய்வு ரூபா 12,056,089 கூடுதலாக கணக்கிடப்பட்டமையால் அப்பெறுமானத்தால் ஏனைய வருமானம் கூடுதலாகவும் மூலதன மானியம் குறைவாகவும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் கரகஹதன்ன வீதி அபிவிருத்தி செயற்திட்டத்திற்குரிய ரூபா 1,463,609 பெறுமானத்தேய்வு கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது.

(ஈ) அம்பேவல காணியை கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக வழங்கியமையால் 2012 ஆம் ஆண்டிற்காக கிடைத்த ரூபா 1,050,000 தொகையினை, முற்பண வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் நானாவித வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) ரூபா 3,836,035 வழங்கல் முற்பணம் மற்றும் ரூபா 1,472,547 கூட்டு மொத்தமான வழங்கல் முற்பணங்களைத் தீர்த்தல் என்பவற்றை ஊழியர் முற்பணக் கணக்கின் கீழ் பதிவு செய்யப்பட்டமையால் வழங்கல் முற்பண மீதி ரூபா 2,363,487 ஆல் குறைந்தும் ஊழியர் முற்பண மீதி அப்பெறுமானத்தால் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மோட்டார் வாகனத்திற்காக பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் ஆடம்பர மோட்டார் வாகனங்களுக்கான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி என்பவற்றை உரிய நிறுவனம் தமது வெளியீட்டு வரிக்கு எதிராக கழிக்கப்பட முடியாத போதிலும், கூட்டுத்தாபனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட மூன்று வாகனங்களுக்காக ரூபா 2,074,671 தொகையான உள்ளீட்டுவரி வெளியீட்டு வரிக்கு ஈடுசெய்யப்பட்டிருந்தன.

(எ) 2010 ஆம் ஆண்டிற்குரிய வருமானமான ரூபா 1,102,714 ஒலிபரப்பு அலைவரிசை விற்பனை வருமானம் மீளாய்வாண்டிற்காக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

2.2.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

பின்வரும் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 10 கணக்கு மீதிகளுக்குரிய முடிவுக் கணக்கு மீதிகளுடனான பட்டோலையில் ரூபா 36,825,724 மீதிகளில் குறைவும் 03 கணக்கு மீதிகளுக்குரிய பட்டோலையின் பிரகாரம் ரூபா 7,074,790 மீதிகளில் அதிகரிப்பும் அவதானிக்கப்பட்டன.

| கணக்குகளின் எண்ணிக்கை | கணக்கின் பிரகாரம் மீதிகளின் மொத்தம் | பட்டோலையின் படி கணக்கு மீதிகளின் மொத்தம் | வித்தியாசம் |
|---|---|---|---|
| …………….. | …………………… | …………………… | ……………….. |
| | ரூபா | ரூபா | ரூபா |
| 10 | 47,964,616 | 11,138,892 | 36,825,724 |
| 03 | 10,422,788 | 17,497,578 | (7,074,790) |

(ஆ) 2007 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரையான கணக்காண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட ஊழியர் முற்பணக் கணக்கு மற்றும் அதற்காக வழங்கப்பட்ட பட்டோலைகளுக்கிடையே ரூபா 8,508,390 இலிருந்து ரூபா 10,218,636 வரையான வீச்சில் வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன், இம்மீதிகளுக்கிடையே வித்தியாசம் ஆண்டுதோறும் வேறுபட்டிருந்தது.

2.2.4 தொங்கற் கணக்கு

---

மூன்று தொங்கல் கணக்கு மீதிகளுக்குரிய கூட்டுப் பெறுமதி ரூபா 6,216,325 ஆக இருந்ததுடன், அதில் 21 ஆண்டுகளுக்கு மேலாக இனங்காணப்படாத ரூபா 221,965 காசு மீதியும் காணப்பட்டது. இவை அனைத்தும் மோசடி காரணமாக உருவாகிய மீதிகள் என்பது தலைவரின் பதிலில் இருந்து தெளிவாகியது.

2.2.5 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பொது முயற்சிகள் திணைக்களத்தின் பரிந்துரையின் பிரகாரம் உரிய அமைச்சின் செயலாளரின் அங்கீகாரமின்றி ரூபா 28,466,498 தொகையான கடன்பட்டோர் பதிவழிக்கப்பட்டிருந்தது. அதில் உள்நாட்டு கடன் மீதியான ரூபா 14,126,933 தொகை ஒவ்வொரு கடன்பட்டோர் மீதிகளுக்குரிய கடன்கொடுத்தோர்

மீதிகளை இனங்கண்டு எதிரீடு செய்வதற்குப் பதிலாக மொத்த கூட்டுத்தொகையும் கடன்கொடுத்தோர் மீதிக்கு எதிரீடு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வானொலி அலைவரிசை கால கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 168,681,587 ஆக இருந்ததுடன், அதில் உள்நாட்டு (பிராந்திய சேவை கடன்பட்டோர் தவிர) மற்றும் வெளிநாட்டு கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 162,446,187 இல் ரூபா 27,938,880 தொகை 5 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலவீச்சைக் கொண்டிருந்ததுடன், ரூபா 40,543,639 அதாவது 25% அளவு 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான மீதியாக இருந்தது.

(இ) விற்பனை நிறைவேற்றுனரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 7,495,430 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 02 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 10,398,636 பெறுமதியான கொடுக்கல் வாங்கல்களும் 02 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 3,078,360,981 பெறுமதியான சொத்துக்களுக்கான பட்டோலைகள், ஏலவிற்பனை தொடர்பான தகவல்களும் பௌதீக மெய்மையாய்வு அறிக்கை என்பன இல்லாததன் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய / சான்றுறுதிப்படுத்த முடியாமல் இருந்தது.

(ஆ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

---

மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வு ஐயவினாக்களில், 17 கணக்காய்வு ஐய வினாக்களுக்காக பதில் கிடைத்திருக்கவில்லை. அது தொடர்பான கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 3,164,623,589 ஆக இருந்தது.

2.2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

---

கீழே குறிப்பிட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| ............................................... | ........................... |
| (அ) அதிகாரச்சட்டங்களுடன் இணங்காமை<br>......................... | |
| (i) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13(2) ஆம் பிரிவு | கணக்காய்விற்காக செலவிடப்பட்ட செலவினங்களுக்குரிய கட்டணத்தை கூட்டுத்தாபனத்தால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் செலுத்தப்பட வேண்டிய போதிலும் 2005 தொடக்கம் 2010 வரை செலுத்தப்பட வேண்டிய ரூபா 3,039,362 கணக்காய்வுக் கட்டணத்தை (வரித் தொகை அடங்கலாக) 2012 யூலை 31 ஆம் திகதி வரையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டம் | 2006 ஆம் ஆண்டிலிருந்து இளைப்பாறிச் சென்ற உத்தியோகத்தர்களுக்காகச் செலுத்தப்பட்டுள்ள பணிக்கொடை தொகை கணிப்பீட்டின் போது சம்பளம் மற்றும் வேதனங்களாக ஆரம்ப சம்பளம் மாத்திரம் உட்படுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) திறைசேரிச் சுற்றறிக்கை 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய இலக்கம் 842 | நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்தல் தொடர்பாக பொது 287 படிவத்தின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் பொது 288 படிவத்தின் பிரகாரம் நிலையான சொத்துப் பேரேடு பேணப்பட்டிருக்க வில்லை. |

(இ) நிதிப் பிரமாணங்கள்

--------------------------------

(i) நி.பி. 135 — வருமானச் சேகரிப்பின் போதும் செலவினங்களை மேற்கொள்ளும் போதும் உத்தியோகத்தர்களுக்கு இடையே நிதிசார் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவில்லை.

(ii) நி.பி. 371(2)(ஆ) — கட்டுநிதியாக வழங்கப்படும் கொடுப்பனவுகள் ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 20,000 இற்கு மேற்படக் கூடாத போதிலும், அந்த எல்லையை மிகைத்து 168 சந்தர்ப்பங்களில் ரூபா 7,013,614 வரை முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.

(iii) நி.பி. 371 (2)(இ) — பதவிநிலைத் தரமற்ற 16 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 3,424,174 தொகை முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. மேலும் வழங்கப்பட்ட செயற்பாடு நிறைவு பெற்றவுடனே தீர்க்கப்படாமல் ஒரு உத்தியோகத்தர் கையில் வைத்திருக்கக்கூடிய காலஎல்லை ஆகக்கூடிய ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் வரை ஆகக்கூடிய தொகையாக ரூபா 1,110,100 வரை பாரிய தொகை உத்தியோகத்தர் கையில் வைத்திருக்கப்பட்டிருந்தது.

2.2.8 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------

நுவரெலியா மற்றும் பதுளை ஆகிய இரு மாவட்டங்களுக்கு உரித்தான 13.57 ஹெக்டேயார் காணிகளுக்காக குத்தகை அனுமதிப்பத்திரம் கிடைத்திருக்காத போதும் கூட்டுத்தாபனத்தின் 13 உத்தியோகத்தர்களுக்கு அதில் 8.1 ஹெக்டேயார் காணியை ஆண்டிற்கு ரூபா 2,000,000 இற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

3. நிதி மீளாய்வு

---------------------

3.1 நிதி விளைவுகள்

--------------------------

கூட்டுத்தாபனத்தின் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 36,414,877 வரிக்கு முன்னரான இலாபமாக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 38,020,868 ஆக இருந்தமையால் வரிக்கு முன்னராக இலாபத்தில் ரூபா 1,605,991 குறைவொன்று காணப்பட்டது. இலாபம் குறைவதற்கு பிரதானமாக

மீளாய்வாண்டின் மீண்டுவரும் மானியங்கள் பெறுவனவு ரூபா 35,000,000 ஆல் குறைவடைந்தமை காரணமாக இருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------------

4.1 செயலாற்றல்

----------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கணக்காய்விற்காக கூட்டுத்தாபனத்தின் 21 பிரிவுகளிலிருந்து செயலாற்றல் அறிக்கைகள் கோரப்பட்டிருந்த போதும் 14 பிரிவுகளுக்குரிய அறிக்கைகள் மட்டும் கிடைக்கப் பெற்றிருந்ததுடன், அதில் பயிற்சி பிரிவு தவிர ஏனைய பிரிவுகளில் செயலாற்றல், செயல் நடவடிக்கைத் திட்டத்துடன் ஒப்பிடக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பயிற்சிப் பிரிவின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் 2011 ஆம் ஆண்டின் செயலாற்றலாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களுடன் ஒப்பிடும் போது உள்ளவாறாக மேற்கொண்ட செயற்பாடுகள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளுடன் வித்தியாசமாக இருந்தது.

(இ) செவிப்புல பரிசோதனை பிரிவொன்று காணப்பட்ட போதும் அதன் மூலம் செவிப்புல பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான அறிக்கை காணப்படவில்லை.

4.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

----------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கூட்டுத்தாபனத்தினால் அறவிடப்பட வேண்டிய ரூபா 4,614 இலிருந்து ரூபா 387,187 வரை பெறுமதியுடைய கடன்பட்டோரிடமிருந்து (வர்த்தக விளம்பரங்களுக்காக) அறவிடப்பட வேண்டிய ரூபா 2,149,202 தொகையினை அறவிடுவதற்கு ரூபா 58,000 சட்டத்தரணிக் கட்டணம் செலுத்தப்பட்டு ஆணைப்பத்திரம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், விற்பனை நிறைவேற்றுனரிடமிருந்தும்/ நான்கு சேவை நாடுனர்களிடமிருந்து 2005 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டி இருந்த ரூபா 6,582,208 தொகையான கடன் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டு தலைமைக் களஞ்சியத்திலிருந்து அந்தந்த பிரிவுகளுக்கு விநியோகிக்கப்பட்ட

பொருட்கள் எதுவும் 2011 பொருள் மெய்மையாய்வு அறிக்கைக்கு உள்ளடக்கப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பௌதீக பரிசோதனை சரியாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அல்லது 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் விநியோகிக்கப்பட்ட பொருட்கள் அப்பிரிவில் பௌதீக ரீதியாக இருக்கவில்லை என தென்படுகின்றது.

4.3 செயற்பாட்டு வினைத்திறைமையின்மை

-------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத 177 வகையான பொருட்கள் தொடர்பாக குழு உத்தியோகத்தர்களால் 2011 மே 20 ஆந் திகதி விற்பனைக்கான ஆகக் குறைந்த பெறுமதி ரூபா 98,000 இற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்ததுடன், பின்னர் மேலதிக உடைந்த இரும்பு இருப்பு உட்பட இப்பொருட்கள் ரூபா 22,500 இற்கு குறைந்து மீண்டும் மதிப்பீடு செய்து விற்பனை செய்தமையால் ரூபா 180,000 கிடைத்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்ததன் பிரகாரம் தலைமை அலுவலகத்தின் ஒவ்வொரு பிரிவிலும் பிராந்திய சேவைகள் மற்றும் அலுவலகங்களில் பொருட்பதிவேட்டுப் புத்தகங்கள் பராமரிக்காமை, நாளது வரையாக்கப்பட்டு பேணாமை, புத்தகங்களை இணக்கம் செய்யாமை, பதிவேடுகளை நாளது வரையாக்கல் மற்றும் பராமரித்தல் என்பன தொடர்பான செயற்திறனின்மையை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.4 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

---------------------------------------------------------------------------------------------------------------------------

ஏக்கல ஒலிபரப்புக் கூடக் காணியில் அமைந்துள்ள 1 ½ ஏக்கர் அளவிலான தென்னைச் செய்கை முறையாகப் பராமரிக்கப்படாமையால் குறைந்த விளைச்சலே கிடைக்கப் பெற்றிருந்தது. மேலும் 18 ஏக்கர் அளவிலான காணி பயன்படுத்தப்படாதிருந்தன.

4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1993 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட லங்கா புவத் நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 10 இலட்சம் தொகைக்கு முதலீட்டு வருமானம் எதுவும் கிடைக்கப் பெறாமல் இருந்ததுடன், முதலீட்டுத் தொகையைத் திருப்பிப் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பெயரின் கொள்வனவு செய்யப்பட்டு பின்னர் குத்தகை வசதிகளைப் பெற்றுக்கொள்வற்காக 2009 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனத்திற்கு ஏனைய இரண்டு வாகனங்களை விட ரூபா 181,296 தொகையை கூடுதலாக குத்தகைக்காக 2011 இல் செலவிடுவதற்கு நேர்ந்திருந்தது.

4.6 ஒப்பந்த நிர்வாகம்

-------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2009 ஆம் ஆண்டின் போது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நடுத்தர காற்றுச்சீராக்கி முறைமையொன்றை பொருத்துவதற்கான செயற்திட்டத்திற்கு ரூபா 13,229,943 தொகைக்குரிய ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடாமல் நிறுவனமொன்றுக்கு ஒப்படைத்து 4 சந்தர்ப்பங்களில் ரூபா 8,600,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. பின்னர் 2010 நவம்பர் 18 ஆம் திகதி ஒப்பந்த உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டு முதலாம் முற்பணத் தொகை செலுத்திய தினத்திலிருந்து 375 நாட்களுக்குள் வேலை முடிவுறுத்தப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்த போதும், 2012 யூலை 12 ஆந் திகதி வரையில் அதனைப் பூர்த்தி செய்து ஒப்படைக்கப்படாமல் இருந்த போதும் கால நீடிப்பிற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2011 இறுதி வரையில் ரூபா 10,300,000 கூட்டுமொத்த தொகை செலுத்தப்பட்டிருந்த போதும் உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.8(அ) பிரிவின் பிரகாரம் செயலாற்றல் பிணைப் பொறுப்பானது வேலையை முடிவுறுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்படும் தினத்திற்கு பின்னர் 28 நாட்கள் செல்லுபடியாக இருக்க வேண்டிய போதிலும் இச்செயற்பாட்டிற்காக 60 நாட்களுக்கு மட்டும் பிணைப்பொறுப்பு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், ஒப்பந்த உடன்படிக்கை கையொப்பமிடும் போதே பாதுகாப்பு பிணைப்பொறுப்பின் காலம் காலாவதியாகியிருந்தது. பாதுகாப்பு பிணைப்பொறுப்பின் காலத்தை நீடிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன், அது தொடர்பான பிரிவும் ஒப்பந்த உடன்படிக்கையில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.7 வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

ஏக்கல ஒலிபரப்புக் கூடம் அமைந்துள்ள காணியில் 12 ஏக்கர் அளவிலான காணியில் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தில்லாத பெக்கோ இயந்திரங்கள் உட்பட இயந்திரங்கள் அதிகளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அதற்கு மேலாக நீரும் மின்சாரமும் வெளிநபர்களினால் பயன்படுத்தப்பட்டு வருவதுடன், கட்டணங்களை அறவிடுதவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.8 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

(அ) கூட்டுத்தாபனத்தின் நிதி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கு அனுபவமுள்ள உத்தியோகத்தர்களின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான போதிலும், பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்/ நிதி) பதவி 2008 திசெம்பர் 01 ஆம் திகதியிலிருந்து வெற்றிடமாக இருந்தது வருவதுடன், பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பொறியியல்) பதவி 2008 யூன் 09 ஆம் திகதியிலிருந்து வெற்றிடமாக காணப்பட்டது. இதன் பின்னர் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) பதவிக்காக மட்டும் 2012 யூலை 06 ஆம் திகதி முதல் ஓராண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தது.

(ஆ) 2005 யூன் 16 ஆம் திகதி அமைப/05/நானாவித/026 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரம் மற்றும் தாபன விதிக்கோவையின் II ஆம் பகுதியின் 9 ஆம் அத்தியாயத்திற்கு முரணாக 2011 ஆம் ஆண்டில் பணிப்பொறுப்பு அடிப்படையில் 21 உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் 16 பேர் தொடர்பாக பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 09/2007 (1) சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக நிரந்தர கடமைகள் வெற்றிடங்கள் இல்லாது நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. ஒப்பந்த அடிப்படையிலும் 34 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அந்த ஒப்பந்த பதவிகளும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு 2011 ஆம் ஆண்டின் போது பணிப்பொறுப்பு அடிப்படையில் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்காக ரூபா 5,299,500 தொகையும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்காக ரூபா 3,367,392 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) 2011 யூலை 05 ஆம் திகதி முதல் ஒரு மாத காலத்திற்காக பதவியணி மீளமைப்பு மீளாய்விற்கும் நிதி ஒழுங்குகளை ஏற்படுத்திக் கொள்ளவும் வருமானத்தை அதிகரிப்பதற்கும் உரிய பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கும்

கூட்டுத்தாபன நிர்வாகத்தை முறைப்படுத்துவதற்கும் உரிய அவதானிப்புக்களையும் பரிந்துரைகளையும் சமர்ப்பிப்பதற்குமாக 03 செயற்பாடுகளுக்காக ரூபா 50,000 கொடுப்பனவு அடிப்படையில் 01 மாதத்திற்காக சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர் அச்செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு மேலும் 03 மாதங்கள் காலத்திற்காக நியமனம் நீடிக்கப்பட்டு ரூபா 200,000 தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதும் பதவியணி கட்டமைப்பு தயாரித்தல் மட்டுமே நிறைவேற்றப்பட்டிருந்ததுடன், அதுவும் பூர்த்தி செய்யப்படாத ஒன்றாகவே இருந்தது.

(ஈ) தாபன விதிக்கோவையின் xii ஆம் அத்தியாயத்தின் 22 பிரிவிற்கு முரணாக இரண்டு உத்தியோகத்தர்களினால் வரையறையில்லாமல் சம்பளமற்ற விடுமுறைகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் அறிவிக்காமல் சேவைக்கு சமூகமளிக்காமல் இருத்தல் இடம்பெற்றிருந்த போதும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) உபகரணங்களைப் பராமரிக்கும் உதவியாளராக சேர்க்கப்பட்ட உத்தியோகத்தருக்காக பயிற்சி தொழிநுட்ப உதவியாளர் பதவியை வழங்குவது தொடர்பாக ஊடக மற்றும் செய்தி அமைச்சு செயலாளரின் பரிந்துரை மற்றும் கூட்டுத்தாபன சபைத் தீர்மானத்தை செயற்படுத்தாமை அடிப்படையில் உயர்நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடுக்கப்பட்டிருந்ததுடன், பின்னர் இணக்கப்பாட்டிற்கு வந்து அப்பதவி வழங்கப்பட்டிருந்தது. இதற்காக சட்டத்தரணிக் கட்டணமாக ரூபா 309,904 கொடுப்பனவு செய்ய நேர்ந்திருந்தது.

4.9 வாகனப் பயன்பாடு
----------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஓடும் நிலையில் இல்லாத 04 வாகனங்கள் தொடர்பாக 2004 ஆகஸ்ட் 31 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை 353(5) ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

(ஆ) ஓட்டப்பதிவேடுகள் தெளிவில்லாமலும் தேவையான பதிவுகள் இல்லாமலும் காணப்பட்டதுடன் மைலோமானி வாசிப்பு ஓட்டப்பதிவேடுகளுடன் இணங்காமை, நாளின் இறுதியில் எஞ்சிய எரிப்பொருளை முன்கொண்டு வரும்போது குறைத்து பதிவு செய்தல், ஓட்டத்தில் ஈடுபட்ட கிலோமீற்றர் அளவு பிரயாண விபரங்களின் பிரகாரம் வழமைக்குமாறாக வேறுபாடுகள் இருந்ததுடன், அதன் பிரகாரம் ஓட்டப்பதிவேடுகள் பொறுப்பில்லாமல் எழுத்தப்படுவது அவதானிக்கப்பட்டது.

5. கணக்களி பொறுப்பும் நல்லாட்சியும்

5.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதில் தாமதம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்கு முடிவுக் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டிய போதிலும், முடிவுக் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 110 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2012 ஏப்ரல் 20 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

5.2 கூட்டுத் திட்டம்

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ம் இலக்க ஆம் பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கமைய, கூட்டுத் திட்டத்தில் அடங்கவேண்டிய விடயங்களில் கூட்டுத்தாபனத்தில் தற்போது நிலவும் மூலவளங்களது குறிப்பு, அமைப்பு வரைபடம், கூட்டுத்தாபனத்தின் பலமும், பலவீனங்களும், சந்தர்ப்பங்களும் மிரட்டல்களும் (சவால்) தொடர்பான பகுப்பாய்வு கடந்த 03 ஆண்டுகளது செயற்பாட்டு விளைவுகள் தொடர்பான புலனாய்வு மற்றும் பதவியணியினரின் விபரங்கள் போன்ற விடயங்கள் 2011 – 2014 ஆண்டுகளுக்கெனத் தயாரிக்கப்பட்ட கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அக்கூட்டுத்திட்டம் 2012 மே 15 ஆம் திகதி வரையில் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்படி சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவு மற்றும் 2007 திசெம்பர் 18 ஆந் திகதிய பீஈடீ 47 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பணிப்பாளர்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுத் திட்டம் வரவு, செலவுத் திட்டம் என்பவற்றை நிதியாண்டு ஆரம்பமாவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் திறைசேரிக்கும் சமர்ப்பிக்கபட வேண்டுமாயின் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

5.3 செயல் நடவடிக்கைத் திட்டம்

(அ) தெளிவாக இனங்காணக்கூடிய வகையில் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளுக்காக பொறுப்பான உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்ப்பாக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக தேவையான வளங்களின் (நிதிசார் மற்றும் நிதிசாராத) அளவுகள் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு காட்டப்பட்டிருக்கவில்லை.

5.4 உள்ளகக் கணக்காய்வு

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) உள்ளக கணக்காய்வாளர் பதவிக்காக சேர்க்கப்பட்டிருந்த உத்தியோகத்தர் அவருக்கு உரித்தல்லாத ஏனைய பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார். வெற்றிடமான உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்காக பதில் கடமை புரியும் உள்ளகக் கணக்காய்வாளராக புலனாய்வு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 04 கணக்காய்வு உதவியாளர் பதவிகள் காணப்பட்ட போதும், நிரந்தர கணக்காய்வு உதவியாளர் ஒருவரே நியமிக்கப்பட்டிருந்தார். மேலும் 02 கணக்காய்வுப் பயிலுனர்கள் இருந்ததுடன், அதன் மூலம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் செயற்பாடுகள் வினைத்திறனாகக் காணப்படவில்லை.

(இ) கணக்காய்வு நியமம் 610 மற்றும் 2009 யூன் 09 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்கள சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கட்டுப்பாட்டின் மதிப்பீட்டிற்கு உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(5)(டி) பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அரையாண்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

5.5 கணக்காய்வு மற்றும் முகாமைக் குழு

------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் குழுவில் ஆகக் குறைந்தது மூன்று நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் சபை அங்கத்தவர்களில் உள்ளடங்கி

இருக்கவேண்டிய போதிலும், பணிப்பொறுப்பு அடிப்படையில் கூட்டுத்தாபனத்தில் சேவையிலீடுபட்டிருந்த இரண்டு பணிப்பாளர்கள் சமூகமளித்திருந்தனர்

(ஆ) பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் விடயப் பரப்பாக 09 செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அதில் 06 செயற்பாடுகளும் முகாமைக் குழுவினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) குழுவின் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய அறிக்கை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வின்போது அவதானிப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் உள்ள குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துப் பதிவேட்டைப் பேணல்
(ஆ) பணம் மற்றும் சொத்துக்களை பாதுகாப்பற்ற முறையில் பேணுதல்
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) கணக்கீடு
(உ) கணக்கு வைப்பு
(ஊ) பதவியணியினர்
(எ) உள்ளகக் கணக்காய்வு

ஒப்பம் : எச்.ஏ.எஸ் சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# 2011ம் ஆண்டு கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் கருத்துக்கள்

2.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துக்கள்

2.2.1 கணக்கீட்டு தரநியமங்கள் இல: 18

தரநியம இல:36

தரநியம இல: 2012ம் ஆண்டின் சர்வதேச தரநியமத்திற்கு இணங்க கணக்குகள் தயரிக்கப்படுவதால் பிழைகள் இடம்பெறுவதில்லை.

2.2.2 கணக்கீட்டின் குறைபாடுகள்

(a) அன்டனா கோபுரங்களின் வரி வருமானக் கணக்கை சரியாக பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(b) அரச மரத்தைச் சுற்றி பாதுகாப்பு வேலியை அமைப்பதற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட பண உதவி அந்த நோக்கத்திற்ககா மாத்திரமே பயன்படுத்தப்பட வேண்டும் என்பதால், அது இவ்விதமாக கணக்கிடப்பட்டது. அந்த பண உதவிக்கு மேற்பட்ட செலவினம் கூட்டுத்தாபனத்தனால் ஏற்கப்பட்டுள்ளது.

(c) ஏனைய வருமானம், பிரதான மூலதணக் கடன்தீர்ப்பை கைவிடுதல் போன்ற கணக்கீட்டின் குறைபாடுகளை திருத்திக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(d) 2011 ஆம் ஆண்டில் அம்பேவல காணி கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டது.

(e) விநியோக முற்கொடுப்பனவு கணக்கிற்கும், ஊழியர் முற்கொடுப்பனவுக் கணக்கிற்கும் இடையிலான குறிப்புக்களை சரிசெய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(f) மோட்டார் வாகனங்களுக்கான உள்ளீட்டு வரியை வெளியீட்டு வரியாக சீர்செய்ய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(g) ஒலிபரப்புக் நேரங்கள் பற்றிய வருமானத்தை கணக்கிடுவதில் 2010ம் ஆண்டில் ஏற்பட்டுள்ள ஒரு தவறு திருத்தப்பட்டுள்ளது.

2.2.3 சமநிலையற்ற கட்டுப்பாட்டு கணக்கு

a) 2012ம் ஆண்டில் புதிய கணக்கீட்டுக் கொள்கைக்கு அமைய கணக்குகளை தயாரிக்கும் போது கட்டுப்பாட்டு கணக்குகளை திருத்திக் கொள்ள ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.2.4 நிச்சயமற்ற கணக்கு

நிச்சயமற்ற கணக்குகள் காரணமாக நிதி மோசடியொன்று இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.2.5. a) ஒரு தொகுதி கடன்வழங்குனர்கள் மற்றும் கடன்பற்றுனர்களுக்காக திறைசேரியின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

b) கடன் வழங்குனர்களின் இந்த நிலுவை மிகவும் குறைந்த சதவீதத்திலேயே காணப்படுகின்றது. இந்த நிலுவைகளையும் அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள அதேவேளை, அறவிட முடியாத நிலுவையை கைவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

c) சந்தைப்படுத்தல் உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை பெற்றுக் கொள்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.2.6 a) கூட்டுத்தாபனம் சொத்துக்கள் மற்றும் ஏலங்கள் தொடர்பான அனைத்து தகவல்களையும் கொண்டுள்ள அதேநேரம், அவை கணக்காய்வு பிரிவுக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

b) 2011ம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வு சம்பந்தமாக 17 கேள்விகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு ஆண்டும் இந்த கணக்காய்வுக் கேள்விகளுக்கு பொருத்தமான பதில்கள் 04.07.2012 ற்கு முன்னர் கையளிக்கப்பட்டுள்ளன.

2.2.7 சட்டங்களுக்கு பொருத்தமின்மை

19.12.1970 அன்று திகதியிடப்பட்ட திறைசேரி சுற்றுநிருபத்தின் நிதி ஒழுங்குவிதி இல : 842

a) i. கணக்காய்வுப் பணியை மேற்கொண்டமைக்காக கணக்காய்வாரள் நாயகத்திற்கு வழங்கப்பட வேண்டிய பணத்தை தவணை அடிப்படையில் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ii. 1983ம் ஆண்டு 12ம் இலக்க பணிக்கொடைகள் சட்டத்திற்கு இணைவாக பணிக்கொடை நிலுவைகள் 2006ம் ஆண்டு முதல் செலுத்தப்படுகின்றது.

b) பொதுவான வடிவமைப்பு 287 க்கு இணங்க நிலையான சோத்துக்களின் பதிவு தயாரிக்கப்படுகின்றது.

c) i) 135. நிதி ஒழுங்குவிதி 135 இற்கு அமைய நிதிசார் அதிகாரத்தை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ii) கூட்டுத்தாபனத்தின் பணி 24 மணி நேரமும் இடம்பெறுகின்றது. அதன் காரணமாக, அந்தப் பணியின் தன்மையைப் பொறுத்து சில சமயங்களில் கொடுப்பனவை 20,000.00 ரூபாவுக்கு வரையறுக்க முடியாது.

iii) பணியின் தன்மையைப் பொறுத்து பணியாளர்கள் அல்லாத உத்தியோகத்தர்களுக்கு முற்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. கடமை பூர்த்தியடைந்ததும் உடனடியாக இந்த கொடுப்பனவுகளை திரும்பச் செலுத்துமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

2.2.8 நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களுக்குரிய அம்பேவல காணியை ஒலிபரப்பு நடவடிக்கைக்காக கூட்டுத்தாபனம் பயன்படுத்தி வரும் அதேவேளை, மத்திய அலைவரிசை ஒலிபரப்பு நடவடிக்கைகள் முடிவுற்றுள்ள போதிலும், எதிர்காலத்தில் நவீன தொழில்நுட்பங்களுடன் ஒரு கூட்டுத்தாபன நிலையத்தை நிறுவ திட்டமிடப்படுகின்றது.

03. நிதிசார் மீளாய்வு

3.1 நிதிசார் பெறுபேறுகள்

04. செயற்பாடுகள் பற்றிய மீளாய்வு

4.1 செயலாற்றுகை/சாதனை

அ. புதிய கூட்டுத்தாபன திட்டத்துடன் இணைந்து வருடாந்த செயல் திட்டம் தயாரிக்கப்படும் அதேவேளை, அதற்கமைய செயலாற்றுகை மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.

ஆ. நிறுவனத் தேவைப்பாடுகளுக்காக பயிற்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்படும்.

இ. கூட்டுத்தாபனம்செவிமடுத்தல் ஆய்வுப் பிரிவு பிராந்திய சேவைகளுடன் இணைந்து 2013ம் ஆண்டுக்கான செவிமடுத்தல் ஆய்வை நாடாளாவிய ரீதியில் மேற்கொண்டு வருகின்றது.

4.2 நிர்வாக செயற்திறனின்மைகள்

அ. கடன்களை மீளப் பெற்றுக் கொள்ளும் ஓர் உத்தியாக கடன்பெற்றவர்களுக்கு அழைப்பாணைக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

ஆ) பிரதான பண்டகசாலைகளினால் தயாரிக்கப்படும் சரக்கிருப்புக் கணக்கிற்கு அமைய சட்டரீதியான கண்காணிப்பை மேற்கொள்ள ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4.3 நடவடிக்கையில் செயற்திறனின்மை

அ) பயன்படுத்த முடியாத 177 பொருட்கள் மீதான மதிப்பீடுகள் திருப்திகரமாக இல்லாதிருந்ததால், மீண்டும் ஒரு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

ஆ) பொருட்கள் மதிப்பீட்டு அறிக்கைகளால் காட்டப்பட்டவாறு, அனைத்துப் பிரிவுகள், பிராந்திய சேவைகள் மற்றும் அலுவலகங்களின் சம்பந்தப்பட்ட அனைத்து பொருட்களின் பதிவுகளும் முறையாக நிர்வகிக்கப்படுகின்றன.

4.4 செயற்பாட்டில் இல்லாத மற்றும் குறைபாவனையுடைய சொத்துக்கள்

ஏக்கல ஒலிபரப்பு நிலைய பூமியில் எந்தத் தொழிலாளர்களும் தெங்குச் செய்கை நடவடிக்கைக்காக ஈடுபடுத்தப்படவில்லை. ஒலிபரப்பு நடவடிக்கைகளுக்காக செயற்படும் ஊழியர்கள் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்குரிய ஊழியர்களாக இருக்கும் போது அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.

4.5 பொருளாதாரம் சாராத கொடுக்கல்வாங்கல்கள்

அ) 1993 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட லங்காபுவத் நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு தொடர்பில் அந்த நிறுவனத்துடன் கலந்துரையாடியதன் பின்னர் ஒரு தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஆ) இந்த செலவினங்களின் அதிகரிப்புக்கு காரணம் கூட்டுத்தாபனத்தின் அவசர வாகனத் தேவையின் அடிப்படையில் வாகனங்களை கொள்வனவு செய்ததன் பின்னர் குத்தகை வசதிகளை பெற்றுக் கொள்ள நேர்ந்ததால் ஏற்பட்ட செலவினங்கனே ஆகும்.

4.6 அ) மத்திய குளிரூட்டல் கட்டமைப்புக்கான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. 12.11.2012 அன்றும் கூட 2.9 மில்லியன் ரூபா தொகையை கூட்டுத்தாபனம் வைத்திருந்தது.

ஆ) ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கலையகங்கள் விடுவிக்கப்படும் போது ஏற்படும் சிரமங்கள் காரணமாக இந்த வேலையை பூர்த்தி செய்ய முடியாதுள்ளது.

4.7 ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் வளங்கள்

ஏக்கல ஒலிபரப்பு நிலையம் அமையப்பெற்றுள்ள காணியில் தேசியத் தேவையின் அடிப்படையில் கீழ்க் குறிப்பிடப்படும் இராணுவப் படைப்பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன.

- பயிர்ச்செய்கை நோக்கங்களுக்காக பொதுச் சேவை படைப்பிரிவு
- கம்பஹா மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பொறியியல் படைப்பிரிவு
- அந்த ஒலிபரப்பு நிலையத்தின் பாதுகாப்பிற்காக பாதுகாப்புப் படைப்பிரிவு

4.8 பணியாளர் நிர்வாகம்

அ) பி.ப.நா (நிதி), பி.ப.நா (பொறியியல்) ஆகிய பதவிகளுக்கான வெற்றிடங்களை பூர்த்தி செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆ) தற்போது கூட்டுத்தாபனத்தின் தேவையைக் கருத்திற் கொண்டு பணி ஒப்படைப்பு அடிப்படையில் 14 அதிகாரிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கான கடமைகளும் வழங்கப்பட்டுள்ளன.

சேவைத் தேவையைக் கருத்திற் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் 79 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நிரந்தர கடமைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இ) திரு. காமினி காரியவசம் ஓர் ஓய்வுபெற்ற நிர்வாக அதிகாரியாவார். இவரின் சேவை 2011 நம்பம் மாதம் முதல் பெறப்பட்டது.

ஈ) இந்த அதிகாரிகளால் பெறறப்பட்ட சம்பளமற்ற விடுமுறைக்காக அவர்களுக்கு சம்பளமும், சம்பள அதிகரிப்பும் வழங்காமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

உ) உபகரண நிர்வகிப்பு பெண் உதியாளர்களால் தொழில்நுட்ப உதவி பதவி கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்ததால், சட்டத்தரணிகளுக்கான கட்டணத்தை செலுத்த வேண்டியேற்பட்டது.

4.9 வாகனப் பயன்பாடு

அ) பயணம் செய்ய முடியாத நிலையில் உள்ள 60 ஸ்ரீ 355 வொக்ஸ் வெகன் வான் வண்டி 150,000.00 ரூபாவுக்கு மதிப்பிடப்பட்டுள்ளது. கேள்விகளைக் கோரி அதனை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

03 மோட்டார் சைக்கில்களுக்கும் கேள்வி அறிவித்தல் வழிமுறைகளுக்கு அமைய இதே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆ) போக்குவரத்துப் பிரிவின் பயண ஓட்டக் குறிப்பிலும், மைலோ மீற்றரிலும் சமநிலை காணப்படாமை மற்றும் எஞ்சியுள்ள எரிபொருள் தொடர்பிலும் தேவையான திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

5.1 அ) நிதிக் கூற்றுக்களை ஒப்படைத்தல்

நிதியாண்டின் நிறைவிலிருந்து 60 தினங்களுக்குள் கணக்குகளை தயார்படுத்தும் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்றாலும், இதற்காக கூட்டுத்தாபன சபையின் அங்கீகாரம் 05.04.2012 அன்றே வழங்கப்பட்டது.

5.2 கூட்டுத்தாபன திட்டம்

அ) 2012-2014 ஆண்டுக்கான ஒரு புதிய கூட்டுறவு திட்டம் தயாரிக்கப்பட்டு கூட்டுத்தாபன சபையின் அனுமதி அதற்காக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தற்போது, இந்தக் கூட்டுறவுத் திட்டம் அமைச்சின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஆ) இதுவரை, இந்த ஆவணங்கள் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்திற்கும் திறைசேரிக்கும் அனுப்பப்பட்டிருக்கவில்லை. இதற்கான ஒழுங்குகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

5.3 செயல் திட்டம்

ஆ) இந்த குறைபாடுகளை தீர்க்கும் வகையில் 2013 ஆம் ஆண்டுக்கான தயாரிக்கப்பட்டுள்ளது

5.4 உள்ளக கணக்காய்வு

அ) உள்ளகக் கணக்காய்வாளராக நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களை மீண்டும் அந்தப் பணியில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆ) இரண்டு கணக்காய்வு உதவியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் உள்ளகக் கணக்காய்வு பிரிவுக்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இ) உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் உள்ளக நிர்வாக மதிப்பீடு மேற்கொள்ளப்படும் அதேவேளை, உள்ளக கணக்காய்வுப் பிரிவால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஈ) மத்திய ஆண்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும்.

5.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

அ) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவில் குறைந்தது நிறைவேற்று பணிப்பாளர் சபையைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்கள் உள்ளடங்கியிருக்க வேண்டுமென்றாலும், பணி ஒப்படைப்பின் அடிப்படையில் இந்த சபையைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்களையும் இந்தக் குழு இதுவரை உள்ளடக்கியிருக்கின்றது. இதனை திருத்தியமைப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆ) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டுத்தாபனத்தின் அனைத்து பிரிவுகள் சார்பிலும் அதன் தொழிற்பாடுகளை நிறைவேற்றி வருகின்றது.

இ) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கைகள் பணிப்பாளர்கள் சபைக்கு கையளிக்கப்படுகின்றன.

6. முறைமைகளும், நிர்வகிப்புக்களும்.

அ) நிலையான சொத்துக்களின் பதிவுகளை நிர்வகித்தல்
ஆ) பணம் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பை பேணுதல்
இ) வருமானத்தை நிர்வகித்தல்
ஈ) கணக்கீடு
உ. கணக்கு வைப்பு
ஊ) ஊழியர்கள்
எ) உள்ளக கணக்காய்வுகள் போன்ற நிலுவைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது.